



# கொடுங்கோன்மைச் சட்டங்களுக்கு எதிராக நீதியின் குரல்

**காவல் சித்திரவதைக்கு எதிரான கூட்டியக்கம், தமிழ்நாடு - புதுவை**

(Joint Action Against Custodial Torture (JAACT, Tamil Nadu & Pudhucherry)

32, பெசன்ட் சாலை, சொக்கிகுளம், மதுரை–625002.

89391 54752 99943 68571 94431 84051

# அர்ப்பணம்

பீமா கொரேகான் வழக்கில் குற்றம்சாட்டப்பட்ட




ஆகியோருக்கும்

சிறையில் வாடும்

மற்ற அரசியல் கைதிகளுக்கும்

சமர்ப்பணம்

# முன்னுரை

காவல் சித்திரவதைகளுக்கு எதிரான கூட்டியக்கம் சாத்தான்குளம் தொடங்கி கடந்த ஓராண்டுக்கு மேற்பட்ட காலத்தில் காவல் நீதியை நிலைநாட்டுவதில் சிறப்பான பங்கு வகித்துள்ளது. சித்திரவதைக் குற்றம் புரிந்தோரை சிறைப்படுத்துவது, குற்றத்தால் துயருற்றோருக்கு நீதிகிட்டச் செய்வது, சித்திரவதைக் குற்றங்கள் மீண்டும் நிகழாமல் தடுப்பது இந்த அரும்பணிகளைச் செவ்வனே செய்திட உறுதி கொண்டுள்ளோம். தமிழ்நாட்டின் குடியாட்சிய, மாந்தவுரிமை ஆற்றல்களை ஓரணியில் திரட்டி நிறுத்தி, போராட்டப் பயிற்சி வழங்குவதிலும், மக்களிடையே காவல் நீதி பற்றிய விழிப்புணர்வை வளர்ப்பதிலும் நமது பயணம் தொடர்கிறது.

அதே போது அனைத்திந்திய அளவில் காவல் சித்திரவதைகளை நிறுவனமயமாக்கும் கொடுங்கோன்மைச் சட்டங்களை எதிர்த்துப் போராடும் தேவை எழுந்துள்ளது. குறிப்பாக பீமா கொரேகான் வழக்கில் அருள்தந்தை ஸ்டான் சுவாமி வயது முதிர்ந்த நிலையிலும் அலைக்கழிக்கப்பட்டு பொய்வழக்கில் சிறைப்படுத்தப்பட்டு கண்ணியப்புறம்பாக நடத்தப்பட்டு நோய்ப்படுத்தப்பட்டு உரிய சிகிச்சை மறுக்கப்பட்டு உயிர் பறிக்கப்பட்ட கொடுநிகழ்வு ஒரு நிறுவனப் படுகொலை என்றே இனங்கானப்படுகிறது. அவரைச் சிறைப்படுத்தவும் சிக்கவைக்கவும் சிதைத்தழிக்கவும் பயன்படுத்தப்பட்டது ’சட்டப் புறம்பான நடவடிக்கைகள் தடுப்புச் சட்டம்’! சுருக்கமாக ஊபா! பீமா கொரேகான் வழக்கின் சூத்திரதாரி தேசியப் புலனாய்வு முகமை, அதாவது என்ஐஏ!

மோதி–அமித்சா நாட்டாண்மையில் கொடுங்கோன்மைச் சட்டங்களும், அரசத் துரோகத்துக்கான 124–ஏ போன்ற தண்டனைச் சட்டப் பிரிவுகளும் மக்கள்நலனுக்கும் மாந்தவுரிமைகளுக்கும் எதிராகப் பேய்க்கூத்தாடக் கண்டு இந்தியத் துணைக் கண்டமே கொதித்துப் போயுள்ளது. இந்தச் சட்டங்களையும் அவற்றின் கொடுவிளைவுகளையும் கண்டித்து விழிப்பூட்டும் முயற்சிகள் அனைத்திந்திய அளவில் முனைப்புற்று வருகின்றன. இந்த முயற்சிகளில் தமிழ் மக்கள் சார்பில் காவல் சித்திரவதைக்கு எதிரான கூட்டியக்கமும் தனக்குரிய வகிபாகத்தை உணர்ந்து செயல்பட்டு வருகிறது.

ஊபா உள்ளிட்ட கொடுங்கோன்மைச் சட்டங்களை எதிர்த்துக் குரல் கொடுப்பதில் மூத்த மனிதவுரிமைச் செயற்பாட்டாளர்களோடு முன்னாள் நீதியர்களும் இணைந்து நிற்பது நமக்கு ஊக்கம் தரவல்லது. நீதித்துறையிலிருந்து ஓய்வு பெற்றாலும் நீதிப் பயணத்திலிருந்து ஓய்வுகொள்ளாத இப்பெருமக்கள் ஆற்றிய செறிவான உரைகளைத் தமிழாக்கம் செய்து நூலாக்கி வெளியிடுகிறோம். தக்கவாறு தமிழாக்கம் செய்தளித்த தோழர்கள் அனைவர்க்கும் நன்றி! இந்நூல் வெளியிடத் துணைநின்ற மக்கள் கண்காணிப்பகத்துக்கும் நெஞ்சார்ந்த நன்றி!

அன்புடன்,

27.08.2021


**தியாகு**

ஒருங்கிணைப்பாளர்

காவல் சித்திரவகைக்கு எதிரான கூட்டியக்கம், தமிழ்நாடு - புதுவை

(Join Action Against Custodial Torture – Tamil Nadu & Pondicherry)

# நூலின் பின்னணி




கடந்த 24 ஜூலை 2021 அன்று இணைய வழியில் மேலே குறிப்பிடப்பட்டுள்ள அழைப்பில் உள்ள Campaign for Judicial Accountability & Reforms (CJAR) மனித உரிமைக் காப்பாளர் கூட்டமைப்பும் (Human Rights Defenders' Alert – India) இணைந்து நடத்திய கருத்தரங்கில் உச்ச நீதிமன்ற, உயர் நீதிமன்றங்களின் நீதிபதிகள் திருமிகு. மதன் லோக்கூர், திருமிகு. ஆலம், திருமிகு. தீபக் குப்தா, திருமிகு. அஞ்சனா பிரகாஷ், திருமிகு. கோபால் கௌடா ஆகியோர் ஆற்றிய உரையின் தமிழாக்கம் இங்கே நூல் வடிவில் தரப்பட்டுள்ளது. இவ்வுரை பொதுமக்களிடம் எளிதில் சென்றடையும் நோக்கோடு காவல் சித்திரவதைகளுக்கு எதிரான கூட்டியக்கத்தின் சார்பில் தமிழில் வெளியிடப்படுகிறது. இவ்வுரை மற்ற இந்திய மொழிகளிலும் வெளியிடுவதற்கான பணிகள் நடந்து கொண்டிருக்கின்றன என்பதை இங்கே தெரிவித்துக் கொள்கிறோம்.

இந்நீதிபதிகளின் உரையினை தமிழில் மொழியாக்கம் செய்திட்ட தோழர். தியாகு, (ஒருங்கிணைப்பாளர், காவல் சித்திரவதைக்கு எதிரான கூட்டியக்கம்), திருமிகு. கண. குறிஞ்சி (தமிழ்த்தேச நடுவம்), திருமிகு. அஜிதா (வழக்கறிஞர், சென்னை உயர்நீதிமன்றம்), திருமிகு. பாலமுருகன் (வழக்கறிஞர், ஈரோடு), திருமிகு. பிரிட்டோ (வழக்கறிஞர், திருநெல்வேலி) ஆகியோருக்கு நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

நன்றி

| பிரஷாந்த் பூஷன் | அஞ்சலி பரத்வாஜ் | ஹென்றி திபேன் |
|---|---|---|
| Senior Advocate, Supreme Court of India | National Campaign for the People's Right to Information (NCPRI) | National Working Secretary, Human Rights Defenders' Alert – India (HRDA) |

தலைப்பு : கொடுங்கோன்மைச் சட்டங்களுக்கு எதிராக நீதியின் குரல்

வெளியீடு : காவல் சித்திரவதைக்கு எதிரான கூட்டியக்கம்,

32, பெசன்ட் சாலை, மதுரை – 625002.

மொழியாக்கம் :

– தோழர் தியாகு, ஒருங்கிணைப்பாளர், காவல் சித்திரவதைக்கு எதிரான கூட்டியக்கம்
– திருமிகு. கண. குறிஞ்சி, தமிழ்த் தேச நடுவம்
– திருமிகு. அஜிதா, உயர்நீதிமன்ற வழக்கறிஞர், சென்னை
– திருமிகு. பாலமுருகன், வழக்கறிஞர், ஈரோடு
– திருமிகு. பிரிட்டோ, வழக்கறிஞர், திருநெல்வேலி

தொலைபேசி : 89391 54752

மின்னஞ்சல் : jaacttn@gmail.com

# உள்ளடக்கம்


1. ஊபா சட்டம்: செயல்பாட்டுத் தணிக்கையும் அச்சட்டம் பற்றிய சில எண்ணங்களும் – மாண்புமிகு திரு. ஆலம், உச்சநீதிமன்ற நீதிபதி (ஓய்வு) 01

2. ஊபா என்ற அநீதி சட்டம் – மாண்புமிகு. அஞ்சனா பிரகாஷ், உயர்நீதிமன்ற நீதிபதி (ஓய்வு) 11

3. மாண்புமிகு. திரு. தீபக் குப்தா உச்சநீதிமன்ற நீதிபதி (ஓய்வு) அவர்களின் உரை 14

4. மாண்புமிகு திரு. வி. கோபால கௌடா, உச்சநீதிமன்ற நீதிபதி (ஓய்வு) அவர்களின் உரை 21

5. மாண்புமிகு திரு. மதன் பி. லோக்கூர், உச்சநீதிமன்ற நீதிபதி (ஓய்வு) அவர்களின் உரை 26

6. 15.08.2021 அன்று இணையவழி நடைபெற்ற சனநாயகத்தைப் பாதுகாப்போம் மாநில பரப்புரைக்கான தொடக்கக் கருத்தரங்கில் மக்கள் சிவில் உரிமைக் கழகத்தின் தேசிய பொதுச் செயலாளர் Dr. V. சுரேஷ் அவர்கள் ஆற்றிய உரையின்போது மேற்கோள்காட்டப்பட்ட புள்ளி விவரங்களின் தொகுப்பு 35

7. தேசிய அளவிலான சனநாயகத்தைப் பாதுகாப்போம் பிரச்சாரத்தின் ஒரு பகுதியாக தமிழ்நாட்டில் மாநில அளவிலான பரப்புரை நிகழ்வின் புகைப்படத் தொகுப்பு 40



# ஊபா சட்டம்:

# செயல்பாட்டுத் தணிக்கையும் அச்சட்டம் பற்றிய சில எண்ணங்களும்

- மாண்புமிகு திரு. ஆலம், உச்சநீதிமன்ற நீதிபதி (ஓய்வு)

அன்பிற்குரிய பங்கேற்பாளர்களே! இன்றைய அமர்வில் ஊபா சட்டத்தின் 'செயல்பாட்டுத் தணிக்கை'யில் தொடங்கி, அச்சட்டம் பற்றிய சில பொதுப்படையான எண்ணங்களை உங்களோடு பகிர்ந்து கொள்ளலாம் எனக் கருதுகிறேன். அரசமைப்புச் சட்டம் தன்னுரிமைக்கு (சுதந்திரத்துக்கு) வழங்கும் உத்திரவாதம், 'தேசியப் பாதுகாப்பு' ஆகிய இரு கோணங்களிலிருந்தும் என் தணிக்கை அமைகிறது. இச்சட்டம் மெய்வாழ்க்கையில் செயல்படும் போது தன்னுரிமைக்கு உத்திரவாதம் வழங்காமல் தேசியப் பாதுகாப்பை உறுதி செய்யும் முயற்சியில் எவ்வாறு ஈடுபடுகிறது என்பதைக் கண்டறிய முயல்கிறேன்.

ஊபா சட்டம் பற்றிய குற்றாய்வுகளில் ஒன்று என்னவென்றால், அச்சட்டத்தின் படியான குற்றத்தீர்ப்பு விகிதம் மிகக் குறைவாகவும் வழக்கு நிலுவையில் கிடக்கும் விகிதம் மிக அதிகமாகவும் இருப்பதால் 'சட்டச் செயல்வழியே தண்டனையாகிறது' என்பதே.

தேசியக் குற்றப் பதிவுகள் கழகத்தின் கடைசி அறிக்கை 2019ஆம் ஆண்டுக்கானது. அந்த ஆண்டுக்கு 'ஊபா' என்ற தலைப்பில் குற்றத்தீர்ப்பு விகிதங்கள் ஒப்பளவில் அதிகமாக 29.2% என்ற நிலையில் இருப்பதை இவ்வறிக்கை காட்டுகிறது.

இந்தக் குற்றத்தீர்ப்பு விகிதம் எவ்வாறு கண்டறியப்படுகிறது? எளிய விடைதான்.

2019ஆம் ஆண்டு 2,361 ஊபா வழக்குகள் விசாரணைக்காக நிலுவை நின்றன. 113 வழக்குகள் கீழ்க்காணும் வகையில் தீர்வு செய்யப்பட்டன.

குற்றத்தீர்ப்பு: 33

வழக்கிலிருந்து விடுதலை: 64

குற்றச்சாட்டு நீக்கம்: 16

ஆக, 29.2% குற்றத்தீர்ப்பு விகிதம் என்பது ஓராண்டில் தீர்வு செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கையுடன் ஒப்பிட்டுப் பெறப்படக் காணலாம் (113/33).1

உசாவல் (வழக்கு விசாரணை) நிலையில் 95% வழக்குகள் நிலுவை நிற்பதையும் இந்த அறிக்கை பதிவு செய்கிறது.

ஆனால், பதிவு செய்யப்பட்ட வழக்குகளின் மொத்த எண்ணிக்கையுடன் அல்லது கைது செய்யப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கையுடன் ஒப்புநோக்கின் உண்மைக்கு நெருக்கமான கணக்கு வெளிப்படும்: குற்றத் தீர்ப்பின் விகிதம் சற்றொப்ப 2% ஆகக் குறையும். ஊபா வழக்குகளின் நிலுவை விகிதம் சற்றொப்ப 98% ஆக உயரும்.

இவை நீதிமன்றத் தீர்வு விகிதங்கள் என்பது நன்கறிந்த செய்தி.

ஆனால் புலனாய்வின் நிறைவைக் குறிக்கும் 'காவல்துறைத் தீர்வு விகிதம்' அவ்வளவு நன்கறிந்த ஒன்றல்ல எனலாம். ஊபா வழக்குகளைப் பொறுத்த வரை , ஊபா குற்றங்களில் குற்ற மடலிடும் விகிதம் 42.5% என்றும், நிலுவை விகிதம் 77.8% என்றும் தேசியக் குற்றப் பதிவுகள் கழகத்தின் அறிக்கை காட்டுகிறது.2

புலனாய்வு, உசாவல் ஆகிய இரு கட்டங்களிலுமே தீர்வு விகிதம் இவ்வளவு குறைவாக இருந்ததால், வழக்கு இறுதியில் தோற்றுப் போகக் கூடும் என்றாலும் குற்றஞ்சாட்டப்பட்டவர் 8,10 அல்லது சில வழக்குகளில் 12 ஆண்டுகளுக்குப் பிறகுதான் சிறைக்காவலிலிருந்து வெளியே வருவார் என்பதில் வியப்பில்லை. ஆகவே ஊபா வழக்குகளில் செயல்வழியே தண்டனையாகி விடுவதாகச் சொல்வது தவறாகாது.

இந்தக் கட்டத்தில் முற்றமுழுக்கத் தேசியப் பாதுகாப்புக் கோணத்திலிருந்து ஒரு கேள்வியைக் கேட்பது பொருத்தமாக இருக்கலாம்: புலனாய்வு முகமைகளுக்கு அசாதாரண அதிகாரங்களை வழங்குவதும், குற்றஞ்சாட்டப்பட்டவர்களின் பல அடிப்படை உரிமைகளையும் சட்ட உரிமைகளையும் நிறுத்தி வைப்பதுமான தனிப்பொறுப்புள்ள சட்டச் சட்டகத்துக்கு இந்தக் காவல்துறைத் தீர்வு விகிதங்கள் பொருந்தி வருமா? மேலும், தேசியப் புலனாய்வு முகமையானது தேசியப் பாதுகாப்புக்குத் தொடர்புள்ள செயல்கள் மீதும் சதிகள் மீதும் நடவடிக்கை எடுக்கும் தனிப்பொறுப்புள்ள முகமைக்கு வகைசெய்கிறது. இந்தப் புள்ளிவிவரங்கள் குறித்து மேலும் விவாதமும் பொறுப்புக்கூறலும் தேவைப்பட்டால் வியப்பில்லை. ஆயின், இந்தத் தனிச் சட்டங்களும், தனிப் பொறுப்பு முகமைகளும் ஊபா வழக்குகளில் விரைவாகவும் கவனஞ்சிதறாமலும் புலனாய்வுகள் செய்து முடிக்கத் தவறி விடுவதாகத் தோன்றுகிறது.

அப்படியானால், அரசமைப்புச் சட்ட உரிமைகளைப் பெரிதும் பலியிடுவதை அடிப்படையாகக் கொண்ட இந்தச் சட்டச் சட்டகத்தை மேற்கண்ட முடிவுகள் நியாயப்படுத்துமா என்று நாம் கேட்கத்தான் வேண்டும்.

இங்கு மும்பை பயங்கரவாத் தாக்குதல் வழக்கை நாம் நினைவுகூரலாம். 2008, 2012, 2019 ஆண்டுகளில் செய்யப்பட்ட திருத்தங்களால் ஊபா சட்டம் மென்மேலும் கடுமையாக்கப்படுவதற்கு முன்பே நடைபெற்ற தாக்குதல் அது. இந்தத் தாக்குதல் ஐநா தீர்மானங்களின் பொருள்விளக்கப்படி மெய்யாகவே ஒரு பன்னாட்டுப் பயங்கரவாதத் தாக்குதல்தான். 2008ஆம் ஆண்டுத் திருத்தச் சட்டத்தில் கடுமையான சட்டத்தை மேலும் கடுமையாக்குவதை நியாயப்படுத்த இந்தத் தீர்மானங்கள் எடுத்துக்காட்டப்பட்டன.

ஆனால், ஒரு செய்தி கருத்தில் கொள்ளப்படவே இல்லை; அதாவது, 2008 நவம்பர் 26க்கும் 29க்கும் இடையே தாக்குதல் நடைபெற்று விட்டது. புலனாய்வு, உசாவல் (வழக்கு விசாரணை), உயர் நீதிமன்றத்திலும், இறுதியில் உச்ச நீதிமன்றத்திலும் மேல்முறையீடுகள் யாவும் 2012 ஆகஸ்டு 29க்குள் முடிந்து விட்டன. **புலனாய்வும் உசாவலும் முழுக்க முழுக்க குற்ற நடைமுறைச் சட்டத்தின் வெவ்வேறு வழிவகைகளில் ஒட்டியுள்ள 20,21,22 ஆகிய அரசமைப்புச் சட்ட உறுப்புகளுக்கிணங்கவே நடைபெற்றன என்பதை நீதிமன்றங்களின் தீர்ப்புகள் காட்டுகின்றன.** நடைமுறையில் கடுமை காட்ட வழிசெய்யும் திருத்தங்கள் நியாயமான விசாரணைக்கோ அல்லது ஊபா வழக்குகள் விரைவாகத் தீர்வு செய்யப்படுவதற்கோ எவ்வகையில் துணை செய்தன?

அப்பாவி மக்கள் கொல்லப்பட்ட வகையிலும் பாரிய அளவில் உடைமைகள் அழிக்கப்பட்ட வகையிலும் பயங்கரவாதத் தாக்குதல் பெருஞ்சேதம் உண்டுபண்ணியதோடு கண்ணுக்குப் புலப்படாத சுற்றடி வழியில் நாட்டின் குற்ற நீதி முறைமைக்கும் மிகவும் கேடான சில விளைவுகளுக்கு வழிகோலி விட்டது. பதறிப்போய் அவசர கோலமாய் ஊபா சட்டத்தில் செய்யப்பட்ட திருத்தங்கள் பாரதூர விளைவுகளை ஏற்படுத்தி விட்டன. இந்தத் திருத்தங்கள் 'பயங்கரவாதச் செயல்' என்பதன் பொருளை விரிவாக்கியதோடு 43A, 43F ஆகிய நடைமுறைசார் பிரிவுகளையும் சட்டத்தில் சேர்த்து விட்டன. 43D(2) என்ற பிரிவு புலனாய்வு முகமை புலனாய்வுக் காலத்தை 180 நாள் வரை நீட்டிக் கொள்ள வாய்ப்பளித்தது; குற்றஞ்சாட்டப்பட்டவர் அதுவரை காவலில் இருக்க வேண்டும். 43D(4), (5) ஆகிய பிரிவுகள் குற்றஞ்சாட்டப்பட்டவர் பிணை விடுதலை பெறுவதை கிட்டத்தட்ட முடியாத காரியமாக்கி விட்டன.

சில நாள் முன்பு திருவாட்டி ஃபரா நாக்வி எழுதிய அருமையான கட்டுரையைப் படிக்க நேர்ந்தது. 2008ஆம் ஆண்டின் சட்டம் எண் 35 எவ்வாறு இந்திய நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது, அதன் மிகக் கடுமையான வழிவகைகள் எவ்வாறு நாட்டுக்குக் கிடைத்த ஏதோ அற்புதப் பரிசு போல் சித்திரிக்கப்பட்டன என்பதை அவர் அக்கட்டுரையில் விவரித்திருந்தார். புலனாய்வுக் காலம் நீட்டிக்கப்பட்டதைப் பொறுத்த வரை இது இச்சட்டத்தை வலுவான அரசுக்குப் பொருத்தமுடையதாக்கும் நோக்கமுடையது என்றும், வேறெந்த நாட்டிலும் இருக்கக் கூடிய இதுபோன்ற சட்டங்களை விடக் கடுமையானது என்றும் நாடாளுமன்றத்தில் - பெருமிதத்துடன் - அறிவிக்கப்பட்டது.

மறுபுறம், சற்றொப்ப அதே நேரத்தில், 2007 ஜூலையில் இலண்டனில் நடைபெற்ற பயங்கரவாதத் தாக்குதலைத் தொடர்ந்து குற்றச்சாட்டுகளை வலியுறுத்துவதற்கான கால அவகாசத்தை 14 நாளிலிருந்து 90 நாளாக உயர்த்துவதற்கான ஒரு முன்மொழிவின் மீது பிரித்தானிய நாடாளுமன்றம் வாக்களித்த போது அது அமோகப் பெரும்பான்மையால் தோற்கடிக்கப்பட்டது. முன்மொழியப்பட்ட அச்சட்டமுன்வடிவின் படி 90 நாள் கால அவகாசமானது காவல்துறையினர் குற்ற வழக்காடல்களில் பயன்படும்படியான சான்றியம் பெறுவதற்கோ, காத்து வைப்பதற்கோ, பகுத்தாய்வதற்கோ அல்லது விசாரிப்பதற்கோ வாய்ப்பளிக்கும் வகையில் பயங்கரவாதக் குற்றங்களில் குற்றஞ்சாட்டப்பட்டோரைக் காவலில் வைக்கும் காலத்தை நீட்டித்து ஆராய்ந்து பார்ப்பதற்கான காலம் என்று கருதப்பட்டிருக்கும். முன்மொழியப்பட்ட திருத்தங்களின் படியே கூட சிறப்பு வழக்குகளிலும் ஓர் உயர் நீதிமன்ற நீதியரின் ஒப்புதலின் பேரிலும்தான் அது சாத்தியமாகியிருக்கும். ஆனால், முன்மொழியப்பட்ட சட்டத்திருத்தம் ’மாந்தத் தன்னுரிமையைக் கேலிப்பொருளாக்கி’ விடும் என்பதால் அந்த சட்டமுன்வடிவு நாடாளுமன்றத்தில் தோற்கடிக்கப்பட்டது. இடைக்கால வழிமுறையாக 28 நாள் கால அவகாசம் வழங்குவது, ஆண்டுதோறும் மீளாய்வு செய்வது என்று தீர்வு காணப்பட்டது. 2012ஆம் ஆண்டு மீண்டும் 14 நாளுக்குத் திரும்பிச் சென்று விட்டனர்.

ஸ்காட்லாந்தில் குற்றப் புலனாய்வின் போது குற்றஞ்சாட்டப்பட்டோரிடம் வினாத் தொடுக்கும் சட்டத்தையும் நடைமுறையையும் ஆய்வுசெய்த கர்லோவே பிரபுவின் 2011ஆம் ஆண்டு அறிக்கை வேறு உள்ளது. ஆனால் அது இந்தியாவில் நமக்கொரு கனவாகத்தான் இருக்கும்; ஏனென்றால் ஸ்காட்லாந்தில் குற்றச்சாட்டுகளை வலியுறுத்துவதற்கு முன்பான காவல் காலம் மணிக்கணக்கில் அளவிடப்படுகிறது; மிகச் சிறப்பான வழக்குகளுக்கு வெளிவரம்பு **24மணிநேரம்தான்**.

கர்லோவே பிரபுவின் அறிக்கை ஐக்கிய முடியரசு (பிரிட்டன்), அயர்லாந்து, மேற்கு ஐரோப்பா ஆகிய இடங்களில் இருக்கும்படியான இதே போன்ற நடைமுறைகளையும் கருதிப்பார்த்து, குற்றச்சாட்டின்றி காவலில் வைத்திருக்க அனுமதிக்கக் கூடிய கால அவகாசத்தைக் கூடுதலாக்கத் தேவையில்லை என்ற முடிவுக்கு வருகிறது. ஏனென்றால் "நம் புலனாய்வு நடைமுறைகள் குற்றஞ்சாட்டப்பட்டவர்களிடம் தகவல் கறப்பதை நம்பியிருக்கவில்லை" என்கிறது அறிக்கை.

அப்படியானால் வலுவான அரசு என்பதற்கான இலக்கணம் என்னஃ தேசப் பாதுகாப்பு' பற்றிய வாய்வீச்சுகளும், ஏட்டிக்குப் போட்டி விவாதங்களும் குறைந்த பொறுப்புக்கூறலும்தனா? அல்லது பொறுப்புக்கூறும் படியான, குறிப்பிட்ட சில குடியியல் தன்னுரிமைத் தராதரங்களை மதிக்கும் படியான, அதே போது உருப்படியாகச் சாதிக்கும் படியான வேறு முன்மாதிரிகள் உள்ளனவே, அவையா?

நம் நாடாளுமன்றத்திலிருந்தே மேற்கண்டவாறு பெறப்படும் எடுத்துக்காட்டு வேறெந்த நாட்டை விடவும் வெகு அதிகமாய் நமது மக்களின் ஆள்வகை விடுமையைப் பறிக்க விரும்புகிறோம் என்பதைக் காட்டுகிறது. அதற்கு எவ்வகை நியாயமும் காட்டவும் இல்லை, பொறுப்புக்கூறலும் இல்லை. கடுமையான தர்மசங்கடத்துக்குரியதாக இருக்க வேண்டிய செய்தி பெருமிதம் பொங்க அறிவிக்கப்படுவதுதான் உள்ளபடியே கவலைக்குரியதாகும். ஆனால் அதுதான் ஆபத்தான சட்டங்கள் செய்யும் கலையாகும்.

பிணை விடுதலைக்கான வழிவகைகளைப் பொறுத்த வரை அடிப்படை ஆதாரமற்றவையாகத் தோன்றும்படியான, எவ்வகையிலும் 'பயங்கரவாதச் செயல்' என்று தேறாத வழக்குகளில் கூட, பிணை வழங்குவதற்கு இச்சட்டத்தில் நுழைக்கப்பட்டுள்ள தடைகளைக் கடக்க நீதிமன்றங்கள் தத்தளிக்கக் காண்கிறோம்.

குற்றஞ்சாட்டப்பட்டவர் குற்றமற்றவராய் இருந்தால், 43D(4)(5) பிரிவுகள் குற்றவியல் சட்டத்தின் அடிப்படைக் கொள்கையை விட்டுக் கொடுப்பதாக/ செயலிழக்கச் செய்வதாக எனக்குத் தோன்றுகிறது. மேலும், அந்த வழிவகைகளில் அடங்கிய கட்டுத்தளைகளை உயர் நீதிமன்றம் அல்லது உச்ச நீதிமன்றத்தின் அதிகாரங்களுக்குப் பொருந்தச் செய்யும் முயற்சி நடக்குமானால் அவ்வழிவகைகளின் அரசமைப்புச் சட்டச் செல்லுபடித்தன்மை ஐயத்துக்குரியதாகி விடும் எனக் கருதுகிறேன். இன்றைய உரையாளர்களில் ஒருவரான **நீதியர் அஞ்சனா பிரகாஷ்** தமது விளக்கங்கள் சிலவற்றில் இந்தக் கருத்தைத் திறமிக்க முறையில் வளர்த்தெடுத்து விரிவாக எடுத்துரைத்துள்ளார்.

சிக்கல் 2008ஆம் ஆண்டுத் திருத்தங்களோடு முடியவில்லை 2012ஆம் ஆண்டிலும், மீண்டும் 2019ஆம் ஆண்டிலும் மேலும் மேலும் திருத்தங்கள் செய்யப்பட்டிருப்பது வருத்தத்திற்குரியது. 2019ஆம் ஆண்டுத் திருத்தங்களின் விளைவாக இப்போது தனியொருவருக்கும் “பயங்கரவாதி” என்று முத்திரையிட முடியும்.

ஊபாதான் பிணை வழங்கும் கட்டத்திலேயே மெய்ப்பிக்கும் சுமையை எதிர்மாறாக்கும் ஒரே சட்டம் என்பதில்லை. NDPS, POCSO, PMLA (அதன் வழிவகைகளை உச்ச நீதிமன்றம் செல்லாமற்செய்யும் வரை) போன்ற பல சிறப்புச்சட்டங்களிலும் இதே போன்ற வழிவகைகள் உள்ளன. அவற்றையும் தவறாகப் பயன்படுத்த முடியும். ஆனால் குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு எதிராக குறிப்பான முதனிலை வழக்கு இருப்பது இப்போதும் இச்சட்டங்களுக்குத் தேவைப்படும். இங்கேதான் ஊபா தனித்து நிற்கிறது. அதன் தெளிவற்ற பெருவீச்சான இலக்கண வரையறைகளின் படி ‘சட்டப்புறம்பான’ அல்லது ‘பயங்கரவாத செயற்பாடு’ என்று முதனிலை வழக்கு தொடுப்பதற்கு அநேகமாய் எந்த ஆதாரமும் தேவையில்லை - **போரும் அமைதியும் புத்தகம் வைத்திருந்தார் என்பது போன்ற அற்பக் காரணமே பயங்கவாதத்தை ஆதரித்தமைக்குச் சான்றாகக் காட்டப்படலாம்.**

இவ்வாறான ‘பயங்கரவாதச் செயற்பாடு’ என்பதை வெகு எளிதில் குறிப்பிட்ட சில அடையாளங்களோடு மட்டும் தொடர்புபடுத்தும் படியான சிலபல சமூக, அரசியல், பண்பாட்டு அளாவல்களை ஆய்ந்து பார்க்கும் தேவையும் உள்ளது.

வன்முறையை எவ்வாறு நோக்கவும் முன்னிறுத்தவும் அரசு முயல்கிறது என்பது ஊபாவின் செயல்பாட்டு நோக்கம் பற்றிய பயனுள்ள ஊடுநோக்கை வழங்குகிறது. **வன்முறை** என்பது வகைப்படுத்தப்படுவது தனியொருவரின் குற்றமாகவா? அல்லது குறிப்பான குழுக்களின் குற்றமாகவா? அரசு அறிக்கைகள் பிணக்குக்கும் வன்முறைக்குமான அமைப்பியல் காரணங்களைக் கவனத்தில் கொள்கின்றனவா?

2000-2004, 2001-2005 காலங்களுக்கான வழக்குகளை எடுத்துரைக்கும் தேசியக் குற்றப்பதிவகத்தின் (NCRB) அறிக்கையில் பொடா அல்லது ஊபா வழக்குகள் பற்றிய தரவுகள் ஏதுமில்லை. ஆனால் அந்த அறிக்கையில் ஓர் அத்தியாயத்தில் (அத்தியாயம் 3) வன்முறைக் குற்றங்கள் கீழ்க்கண்டவாறு வேவ்வெறு தலைப்புகளில் வகைபிரிக்கப்படுகின்றன:

**I. உயிருக்குப் பாதிப்பான வன்முறைக் குற்றங்கள்:**

கொலை (இதச 302), கொலை செய்ய முயற்சி (இதச 307), கொலை ஆகாத குற்றமுறு உயிர்பறிப்பு (இதச 304), வரதட்சணைச் சாவுகள் (இதச 304-B), கடத்தி செல்லுதல் (இதச 363 முதல் 369, 371 முதல் 373);

**II.உடைமைக்குப் பாதிப்பான வன்முறைக் குற்றங்கள்:**

கொள்ளை (இதச 395 முதல் 398), கொள்ளையடிப்பதற்கான ஆயத்தமும் ஒன்றுகூடலும் (இதச 399 முதல் 402), திருட்டு (இதச 392 முதல் 394,397 முதல் 398);

**III. பொதுப் பாதுகாப்புக்குப் பாதிப்பான வன்முறைக் குற்றங்கள்:**

கலகங்கள் (இதச 143-145, 147-150, 151, 153, 153-A, 153B, 157, 158, 160)

தீவைப்பு (இதச 435, 436, 438)

**IV.பெண்களுக்குப் பாதிப்பான வன்முறைக் குற்றங்கள்:**

வல்லுறவு (இதச 376)

அடுத்துக் குற்றங்கள் மேலும் வகைப்படுத்தப்படுகின்றன. உள்வகைப்பாட்டின் தலைப்புகளில் ஒன்று கொலை நோக்கங்கள் என்பதாகும். இது கருத்துகுரியது மட்டுமல்லாமல் முக்கியம்னானதும் ஆகும். 2001-2005 ஆண்டுகளுக்கு அது பின்வருமாறு உள்ளது:

**கொலை நோக்கங்கள்**

**கொலைகள் நடப்பதற்கு முதன்மை நோக்கங்களாக இருந்தவை கடந்த காலத்தில் போலவே சொந்த வன்மம் அல்லது பகைமையும் சொத்துத் தகராறும்;** முறையே 11.8 விழுக்காடும் 8.6 விழுக்காடும் இந்தக் கணக்கில் அடங்கும். **மற்ற முக்கிய நோக்கங்களாக இருந்தவை காதல் பூசல்கள் (7.4%) பயங்கரவாதிகள் / தீவிரவாதிகளின் வன்கொடுமைகள் (3.1%). மகாராட்டிரம் வர்க்க மோதலால் 60.8 விழுக்காடு கொலைகள் நடந்திருப்பதாக அறிக்கையிட்டுள்ளது. பீகார் கொலைகளில் 42.5 விழுக்காடு சாதியத்தால் நிகழ்ந்ததாகக் கணக்குக் கொடுத்துள்ளது, 36.3 விழுக்காடு கொலைகளுக்கு அரசியல் காரணங்கள்' இருந்தன.**

கொலைக் குற்றம் பற்றிய இந்தப் பகுத்தாய்வில் குற்றத்துக்கும் குற்றவாளிக்கும் இடையே ஒரு தெளிவான காரண காரியத் தொடர்பு உள்ளது. வர்க்க / சாதிக் கட்டமைப்பு இருப்பது தெளிவாகத் தெரிவதும், அந்தக் கட்டமைப்புகளுக்குள் எழும் சமூக / வர்க்க மோதல்களைப் பற்றிய விழிப்புணர்வும் இன்னுங்கூட முக்கியமானது. இது சமூக / அரசியல் பதற்றங்களுக்கும் பெருவீத வன்முறையோடு அவற்றுக்குள்ள காரண காரியத் தொடர்புக்கும் ஒரு மிக முக்கிய ஒப்புதலெனக் கண்டேன்.

மேலும், 2004, 2005 அறிக்கைகளில் 'பயங்கரவாத, தீவிரவாதக் குற்றங்கள்' என்பவை மொத்த வன்முறைக் குற்றங்களில் முறையே 3.3, 3.1% ஆகும் என்ற கணக்கும் நோக்கற்பாலது; இதுவும் கூட குறிப்பான சில பகுதிகளில் நடைபெற்ற நிகழ்ச்சிகளாக ஒதுக்கப்படுகிறது. ஆனால் சாதி தொடர்பான வன்முறை குறிப்பிட்ட சில மாநிலங்களில் நடைபெறும் குற்றங்களில் கிட்டத்தட்ட 27% - 33% ஆகிறது. இதே போல் சாதி மோதல்களும் வகுப்புவாத மோதல்களும் மொத்த வன்முறையில் பாரிய விழுக்காடாகின்றன.

குற்றங்களை இப்படிக் கூர்மையாக வகைப்படுத்துதல் 2004-2005க்குப் பின் கலங்கி அழியத் தொடங்குகிறது. 2014க்குப் பிறகு இந்த வடிவமைப்பே மாற்றப்படுகிறது. அண்மையச் செய்திகளைப் பார்க்கும் போது, முன்னர் வன்முறைக் குற்றங்களின் மொத்தத் தொகையில் மிகச் சிறு விழுக்காடாக இருந்த 'பயங்கரவாத வன்முறை' இப்போது நடுவரங்கில் தூக்கி நிறுத்தப்படுவதாகவும், அதே நேரத்தில் மற்றச் சிலபல அமைப்பியல் பிணக்குகள் கண்ணுக்குப் புலப்படாமல் அறவே மறைக்கப்படுவதாகவும் தெரியும். வன்முறை என்பது எப்படிச் சட்டத்திலும் கூட அரசியல் நோக்கில் கட்டுமானம் செய்யப்படுகிறது என்பதை இதிலிருந்து அறியலாம்.

குற்றங்கள் இப்போது அவை பதியப் பெறும் சட்டங்களுக்கு ஏற்ப வகைப்படுத்தப்படுகின்றன. இப்படித்தான் சாதி அல்லது வர்க்க அல்லது வகுப்புவாதப் பிணக்குகளால் நடக்கும் கொலைகள், முன்பு அவ்வாறே வகைப்படுத்தப்பட்டவை, இப்போது 302ஆம் பிரிவின் கீழ் பட்டியலிடப்படும் தனிப்பட்ட குற்றங்களாக் காட்டப்படுகின்றனவே தவிர, அக்குற்றங்களின் மூலகாரணத்தை வெளிப்படுத்துவதில்லை

'பயங்கரவாதக் குற்றங்கள்' எனப்படுகிறவை 'ஊபா சட்டத்தின் கீழ் பதியப்பெறும் குற்றங்கள்' என்று மாற்றி வகைப்படுத்தப்பட்டு, 'அரசுக்கு எதிரான குற்றங்கள்' என்ற அத்தியாயத்தில் அரசத் துரோகம், 'தேசிய ஒருமைப்பாட்டுக்குக் குந்தகம் செய்யும் பழிச்சாட்டல், உரைகள்' போன்ற இந்தியத் தண்டனைச் சட்டக் குற்றங்களோடும் "பொதுச்சொத்துக்கு சேதம் ஏற்படாமல் தடுத்தல் சட்டத்தின்" கீழான குற்றங்களோடும் கூட

சேர்த்து வைக்கப்படுகின்றன. இப்படி 'வன்முறை'யை மீள்வரிசைப்படுத்துவதே அதனை மேலும் முனைப்பற்றதும், அதே போல் மேலும் 'அரசியல்மயப்பட்ட'தும் ஆக்கி விடுகிறது. அது முனைப்பற்றதாவதாகச் சொல்லப்படுவது ஏனென்றால் அது 'அரசுக்கு எதிரான குற்றங்கள்' அல்லது 'ஊபாவின் கீழான குற்றங்கள்' என்று, வேறு முத்திரைகள் ஏதுமின்றிப் பிரதிபலிக்கிறது. ஆனால் செயல்களின் இந்தக் குழுச் சேர்க்கை ஏற்படுத்தும் கருத்து என்னவென்றால், **தேசிய ஒருமைப்பாட்டுக்குக் குந்தகமான உரைகளுக்கு அரசத் துரோகம் என்றும், பொதுச்சொத்துக்குச் சேதம் என்றும், பயங்கரவாதம் என்றும் பழிச்சாட்டும் பேச்சுச் செயல்களிலிருந்து ஒரு தொடர்ச்சி இருப்பதாகக் காட்டுவதால் அது மேலும் அரசியலாகிறது.**

என் பார்வையைத் தெளிவாக்க வேண்டி ஓர் எடுத்துக்காட்டு தருகிறேன். ஒருவர் நல்லெண்ணத்தோடு பகுத்தறிவின் அடிப்படையிலும் ஏரணத்தின் அடிப்படையிலும் முற்றமுழுக்க அமைதியாக உரை நிகழ்த்துவதாகக் கொள்வோம். அவர் அரசாங்கத்தின் ஒரு சட்டத்தையோ ஒருசில செயல்கலையோ குற்றாய்வு செய்வதற்காக அரசமைப்பின் வழிவகைகளையும் சட்ட வழிவகைகளையும் எடுத்துக்காட்டிப் பேசுகிறார். பிறகு சிலர் அமைதியான முறையில் எதிர்ப்பு ஊர்வலம் நடத்துகின்றனர்: வேறு சிலரும் ஊர்வலம் நத்துகினறனர். அது அவ்வளவு அமைதியாக நடைபெறவில்லை - சில பொதுச்சொத்துகள் சேதமாக்கப்படுகின்றன. ஏதேனும் ஒரு சட்டப் புறம்பான அல்லது பயங்கரவாத அமைப்பு அல்லது தனியாளும் இந்த குறிக்கோளை ஆதரித்து அறிக்கை விடுவதாக் கொள்வோம்; வேறு ஒருவர் குண்டு வீசியதில் ஒருசிலர் உயிரிழக்கின்றனர். இப்போது, ஊபாவுக்கு மிகைப்படத் தரப்பட்ட இலக்கணங்களின் அடிப்படையிலும் குறிப்பிட்ட சில குற்றங்களைக் குழுச்சேர்க்கும் இந்த வழிமுறையின் அடிப்படையிலும் குண்டு வீச்சிலிருந்து கருத்து மாறுபாட்டுப் பேசிய பேச்சு வரை ஒற்றைச் சதியின் பகுதியாகக் கருதப்படலாம், அல்லது தேசவிரோத நடவடிக்கைகளின் வீதப்படிசார் அளவுகோலில் தொடர்புடைய குற்றங்களாகக் கருதப்படலாம். உரையாளர் பயங்கரவாதச் செயல் செய்த குற்றச்சாட்டுக்கு ஆளாகும் நிலை ஏற்படவும் வாய்ப்புண்டு.

அதாவது, வன்முறையான 'பயங்கரவாதச் செயல்களை' (முன்பு மொத்த வன்முறைக் குற்றங்களில் வெறும் 3.3% ஆக இருந்தவற்றை) வன்முறையல்லாத பேச்சுச் செயல்களோடு அல்லது அற்ப வன்முறையோடு குழுச்சேர்ப்பது பயங்கரவாதம், என்றும் 'தேசியப் பாதுகாப்பு' என்றும் ஒரு புதிய கற்பனையை உண்டாக்கி, அதில் எல்லா விதமான கருத்து மாறுபாட்டையும் சேர்த்துக் கொண்டு, பயங்கரவாதச் சிக்கலை அரங்கின் நடுவில் ஏற்றி வைக்கிறது. இந்த மீள்குழுச்சேர்ப்பு தேசியப் பாதுகாப்பின் மீதும் ஒரு பாதக விளைவை ஏற்படுத்துவதாக எனக்குப்

படுகிறது. எப்படியென்றால் உள்நாட்டுக் கருத்து மாறுபாட்டின் மீது மேலும் கவனம் குவிப்பதன் மூலம் தேசியப் பாதுகாப்புக்கு உண்மையான அச்சுறுத்தலும் முந்தைய அறிக்கைகளில் மொத்த வன்முறையில் தோராயமாக 3% என்று கணக்கிடப்படுவதுமான வழக்குகள் போதிய கவனம் பெறத் தவறி விடுகின்றன.

அதே போது, எடுத்துக்காட்டாக சாதி, வகுப்பு (வர்க்கம்), வகுப்புவாதம் போன்றவை தொடர்பான கடும் வன்முறைக்கு வழிசெய்யும் பிற முக்கியக் காரணங்கள் 'அரசுக்கு எதிரான குற்றங்கள்' என்று வகைப்படுத்தப்படவில்லை. அவற்றால் தேசிய ஒருமைப்பாட்டுக்கு எவ்வித அச்சுறுத்தலும் இல்லை என்று பொருளாகிறது. மேலும், கட்டமைப்பியல் வன்முறை பெரிதும் கண்ணுக்குப் புலப்படாமல் செய்யப்படுகிறது, 'இந்தியத் தண்டனைச் சட்டம் 302ஆம் பிரிவின் கீழான குற்றங்கள்' என்பன போன்ற 'வீரியமற்ற வகைப்பாடுகளில்' அல்லது அட்டவணைச் சாதிகள் / அட்டவணைப் பழங்குடிகள் (வன்கொடுமைகள் தடுப்பு) சட்டம் போன்ற தனிமனிதக் குற்றங்களாகத் தொலைந்து போகின்றன. இப்படித்தான் வெறுப்பு வளர்த்தல் குற்றம் என்பது 302ஆம் பிரிவின் கீழான ஒரு குற்றச்செயலாக மட்டுமே கருதப்படலாம்.

உலகின் ஆகப் பெரும் குடியாட்சியத்தில் இந்த மிகக் கொடுமையான சட்டம் நம்மை எங்கு கொண்டுசேர்த்துள்ளதுஃ இச்சட்டத்தின் விளைவுகளை அனைவரும் பார்த்துக் கொள்ளலாம். வழக்கு விசாரணையே இல்லாமல் ஸ்டான் சுவாமி இறந்து போகக் கண்டு வருந்தினோம். 8,10 அல்லது 12ஆண்டுகள் கூட சிறைப்பட்டுக் கிடந்த பின் வழக்கிலிருந்து விடுவிக்கப்பட்டு வாழ்வு முறிந்து, வருங்காலமே அற்றுப் போய் சிறைமீண்டு வரும் ஏராளமான இந்தியர்களையும் நாம் மறந்து விடக் கூடாது.

தேசியப் பாதுகாப்பு, அரசமைப்புச் சட்ட உரிமைகள் ஆகிய இரு வகையிலும் ஊபா நமக்குதவத் தவறி விட்டது. முற்றான முழுச்சீர்மை அவசர அவசியம் என்று பணிந்துரைப்பேன்.

என் உரையை முடிக்குமுன் ஒன்று சொல்ல விரும்புகிறேன்: முதுநிலை வழக்கறிஞர் திரு சி.யு.சிங் எழுதிய ஒரு கட்டுரையை அண்மையில் படித்தேன். குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் ஆண்டுக்கணக்கில் சிறைப்பட்டுக் கிடந்த பின் விடுவிக்கப்படும் போது இழப்பீடு கோருவதற்கு ஆதரவாக அவர் வாதிட்டுள்ளார். இந்தக் கருத்தின் மீது மேல்நடவடிக்கை எடுப்பது பொருத்தமாக இருக்கும் எனக் கருதுகிறேன்.



# ஊபா என்ற அநீதி சட்டம்

- மாண்புமிகு. அஞ்சனா பிரகாஷ், உயர்நீதிமன்ற நீதிபதி (ஓய்வு)

சட்டவிரோத நடவடிக்கை தடுப்புச் சட்டம் மற்றும் தேச துரோக சட்டம் ஆகியவை இன்றைய சூழலில் தேவையா? என்ற கேள்வி பலராலும் எழுப்பப் பட்டுள்ளது. நான் நீதிபதி தீபக் குப்தா அவர்களின் கருத்தில் உடன் படுகின்றேன். தற்போடைய சட்டவிரோத நடவடிக்கை சட்டம் (ஊபா) ஏற்புடையதல்ல. அச்சட்டத்தின் நடைமுறை பற்றி பின்னர் விவாதிக்கலாம். ஆனால் அந்த சட்டம் பயங்கரவாதிகள், பயங்கரவாத செயல் என்பதற்கு கொடுத்துள்ள விளக்கம் வெற்று விளக்கமாக உள்ளது. இதனால் எவரும் இச்சட்டத்தால் பாதிக்கக்கூடும். எனவேதான் பசு மூத்திரம் கொரானாவை குணப்படுத்தாது என கருத்து தெரிவித்தவர் மீது அரசுக்கு எதிராக வெறுப்பை தூண்டியதாக கைது செய்து சிறைப்படுத்த முடிகின்றது. இச்சட்டம் அரசின் இறையாண்மையை பாதுகாப்பதற்கு பதிலாக அரசியல் கட்சிகளை பாதுகாக்கவும் அதன் இறையாண்மையை நிறுவவும் பயன்படுத்தப்படுகின்றது.

நமது சட்டங்கள் குறிப்பாகவும், தெளிவாகவும் இருக்க வேண்டும். வெறுமனே வெற்று வார்த்தைகளுடன் எதற்கு வேண்டுமானாலும் தவறாக பயன்படுத்தும் வகையில் இருக்க கூடாது. ஆனால் ஊபா சட்டம் தவறாக ப்யன்படுத்தும் வகையில் உள்ளது.

இரண்டாவதாக நம் சட்டங்களின் அடிப்படை தன்மையை புரிந்து கொள்ள வேண்டும். உலகளாவிய மனித உரிமை பிரகடனம் அதன் பிரிவு 11 ஒவ்வொரு மனிதனும் குற்றமற்றவர் என அனுமானிக்கும் உரிமையை உறுதி செய்கின்றது. நமது 1950 ஆண்டு அரசியலமைப்புச் சட்டம் பிரிவு 20(3) தனிநபர் ஒருவரை குற்றவாளியாக கருதும் நிலையிலிருந்து தற்காத்துக் கொள்ளும் உரிமையை அங்கீகரிக்கின்றது. எனவே அந்த நபர் கேள்விக்கு பதில் சொல்லாமல் மௌனமாகக் கூட இருக்க முடியும். 1976 ஆண்டின் சர்வதேச சிவில் மற்றும் அரசியல் உரிமை மாநாட்டு வரைவானது உலகம் முழுதும் ஒரு நபரை அப்பாவி என அனுமானிக்கும் உரிமையை உறுதி செய்துள்ளது. அந்த உரிமையை அரசாங்கம் தன்னிச்சையாக பறிக்க முடியாது.

ஊபா சட்டத்தில் சில அடிப்படை குற்றவியல் கோட்பாடுகளை நான் விவாதிக்க விரும்புகின்றேன்.

முதலில் சட்டத்தின் படி குற்றம் சாட்டப்பட்டவரை அது நிரூபிக்கப்படும் வரை அப்பாவி என கருத வேண்டும். இரண்டாவதாக அந்த நபருக்கு எந்த பதிலும் சொல்லாமல் அமைதியாக கூட இருக்க உரிமை உண்டு. மூன்றாவதாக குற்றம் சாட்டப்பட்டவர் மீது சந்தேகத்திற்கிடமின்றி குற்றத்தை நிரூபிக்க வேண்டும். நான்காவது அரசாங்கம் குற்றத்தை எவ்வளவு நிரூபிக்கின்றதோ அந்த அளவே தண்டனை இருக்க வேண்டும்.

சட்டத்தின் நிலை மேற்கண்டவாறு உள்ளபோது, ஊபா சட்டத்தின் பிரிவு 43(E) குற்றம் சாட்டப்பட்டாலே அந்த நபரை குற்றவாளியாக கருத வேண்டும் என்கிறது. இதனால் குற்றம் நிரூபிக்கப்படும் வரை அப்பாவியாக கருத வேண்டும் என்ற சட்ட கோட்பாடு மறுக்கப்படுகின்றது. அடுத்து இந்த வழக்கில் கைது செய்யப்பட்டவரே தன்னை அப்பாவி என நிரூபிக்க வேண்டும் அதுவும் சட்ட அடிப்படைக்கு எதிரானது. மேலும் கடுமையான தண்டனையை பொருத்து அந்த குற்றத்தை நிரூபிக்கும் பொறுப்பு கூடுதலாக அரசுக்கு இருக்க வேண்டும். ஆனால் ஊபா சட்டத்தில் சில சாதாரண குற்றங்களுக்கு கூட ஆயுள் தண்டனை, மரண தண்டனை என உள்ளது. இதை எந்த வடிவிலும் நியாயப்படுத்த முடியாது.

இந்திய சாட்சியல் சட்டத்தில் பிரிவு 106ன் படி குற்றத்தை நிரூபிக்கும் பொறுப்பு எப்போது குற்றம் சாட்டப்பட்டவருக்கு வரும் என்றால், அந்த குற்றம் அவரின் சிறப்பு கவனத்துடன் நடந்தது என்ற நிலை வரும்போது மட்டுமே. மேலும் அதே சட்டத்தில் பிரிவு 113 (A)(B) என்ற பிரிவுகள் புதிதாய் சேர்க்கப்பட்டு நிரூபிக்கும் பொறுப்பு குற்றம் சாட்டப்பட்டவர் மீது வரதட்சனை மரணம் போன்ற வழக்குகளில் சுமத்திய போதும், முதலில் அந்த குற்றச்சாட்டின் அடிப்படை முகாந்திரத்தை நீதிமன்றத்தில் அரசு நிரூபிக்க வேண்டும் அதன் பின்பே குற்றம் சாட்டப்பட்டவருக்கு தன்னை அப்பாவி என நிரூபிக்கும் சுமை வரும். ஆனால் ஊபா சட்டத்தில் நேர் எதிர் திசையில் இந்த கோட்பாடு பயன்படுத்தப்படுகின்றது.

ஊபா சட்டத்தின் பிரிவு 43(D) குற்றம் சாட்டப்பட்டவருக்கு எதிராக ஆவணங்கள் இருந்தால் அவரை குற்றவாளியாக பார்க்க வேண்டும், பிணை வழங்கக்கூடாது என கூறுகின்றது. ஒருவரை வழக்கின் ஆரம்ப காலமான பிணை கோரும் காலத்திலேயே நீதிமன்றம் குற்றவாளி என கருதிவிட்டால், பின் விசாரணைக்கு பின் என்ன முடிவுக்கு நீதிமன்றம் வரும்? அரசு தரப்புக்கு என்னதான் வேலை?

முதல் நிலை தோற்றத்தில் அதாவது மேலோட்டமாக பார்த்தபோது அவர் மீது குற்றம் தென்பட்டால் நீதிமன்றம் பிணை வழங்கக்கூடாது என இச்சட்டம் சொல்கின்றது. ஆனால் எந்த நீதிமன்றம் என குறிப்பிடவில்லை. நமது நீதிமன்றங்களில் அதிகாரம் தலைகீழாய் கவிக்கப்பட்ட பிரமீடுபோல உள்ளது. அதிக அதிகாரம் மற்றும் கூடுதல் விருப்ப முடிவு

எடுக்கும் நிலையில் உள்ள உச்ச நீதிமன்றமும் சாதாரண மாவட்டம் நீதிமன்றம் போல , இந்த வரையறுக்குள் வரும் என்பது போன்ற தோற்றம், குற்றவியல் நடைமுறை சட்டத்திற்கு எதிராக உள்ளது.

குற்றவியல் நடைமுறைச் சட்டம் 1974 ஆண்டு வந்த பின்பு பிணை வழங்கும் அதிகாரத்தை எல்லா நீதிமன்றத்திற்கும் பரவலாக்கியுள்ளது. இந்த முக்கியத்தை இந்த ஊபா சட்டம் நிராகரிப்பது ஏன்? கெடு வாய்ப்பாய் தடா சட்டத்தில் இது போன்று இருந்த பிரிவை நீக்க உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளில் இந்த நியாயத்தை உச்சநீதிமன்றம் விவாதிக்காமல் வெறுமனே தேச நலன் கருதி ஆட்சியாளர்கள் கொண்டு வந்த சட்டம் என்ற ஒன்றை சொல்லி எல்லா வழக்குகளையும் கடந்த காலங்களில் தள்ளுபடி செய்துவிட்டது. ஆட்சியாளர்கள் கொண்டு வந்தார்கள் என்பதற்காக மனித உரிமைக்கு எதிரான பிரிவை கேள்வி எழுப்பாமல் சென்றது சரியல்ல. மேலும், எந்த நீதிமன்றமும் மக்களின் சிவில் உரிமைகளை கொல்லும் இந்த சட்டப் பிரிவை கேள்வி எழுப்பவில்லை.

ஊபா சட்டத்தின் திருத்தமானது 9/11 தாக்குதலுக்கு பிறகு ஐ.நா பாதுகாப்பு சபை 1373 தீர்மானத்தின் மூலம் கொண்டு வரப்பட்டது. அது அல் கொய்தா, ஆப்கானிஸ்தான், ஒசாமா பின் லாடன் தொடர்புகளை குறி 2008 ஆண்டு கொண்டு வரப்பட்டதாக சொல்லப்படுகின்றது. இந்தியாவுக்கு தொடர்பில்லாத மத்திய கிழக்கு பிரச்சனைக்காக இந்தியாவில் ஏன் இந்த சட்டம் வரவேண்டும்? அதற்கு என்ன தேவை இருக்கின்றது?

உலகம் முழுதும் இதுபோன்ற பயங்கரவாத தடுப்புச் சட்டங்கள் தவறாக பயன்படுத்தப் படுகின்றன. இதை அமெரிக்க மிஷனுக்கான நிரந்தர துணை பிரதிநிதி அம்பாஸ்டர் ரிச்சர்ட் மில்ஸ் என்பவர் பயங்கரவாத தடுப்பு சட்டம் 1373 தீர்மானமாக கொண்டு வரப்பட்டதன் இருபதாண்டு நினைவு தினத்தில் கடந்த 12.1.2021 ஐ.நா சபையில் கீழ்கண்டவாறு பேசினார்.

“வரலாற்றில் பயங்கரவாத தடுப்பு நடவடிக்கை என்பது திரும்பத் திரும்ப மனித உரிமைகளை காவு வாங்கிக் கொண்டு நடக்கின்றது. எனவேதான் அமெரிக்க அரசு மத சிறுபான்மையினர், சிறுபான்மை குழுக்களை சேர்ந்தோரை கும்பல் கும்பலாக சிறை பிடிப்பதை எதிர்த்து வருகின்றோம். இங்கே பயங்கரவாத தடுப்பு பற்றி பேசும் நாடுகள் தங்கள் உள்நாட்டில் அந்த பெயரை பயன்படுத்தி சிறுபான்மை மக்களின் மனித உரிமையை மீறாமல் இருக்க வேண்டும்” ஆனால் நீதிமன்றம் மேற்கண்ட கருத்தை காண தவறிவிட்டது.



# மாண்புமிகு. திரு. தீபக் குப்தா உச்சநீதிமன்ற நீதிபதி (ஓய்வு) அவர்களின் உரை

இன்றைய விவாதத்தின் முக்கியக் கருத்து சனநாயகம், கருத்து மாறுபாடு மற்றும் கருப்பு சட்டங்கள் என்பதாகும். சனநாயகத்தில் கருத்து வேறுபாடு என்பது அத்தியாவசியமானது. ஆனால் கருப்பு சட்டங்களுக்கு சனநாயகத்தில் இடமில்லை. சமீப காலங்களில் குறிப்பாகக் கடந்த சில வருடங்களாக அரசுக்கு எதிராகக் கருத்து கூறுபவர்களின் குரல்வளையை நெறிக்கவும், அரசை எதிர்த்துக் கேள்வி கேட்பவர்களை அடக்குவதற்காகவும் மட்டுமே சட்டங்களை தவறாக பயன்படுத்தும் நிலையைக் கவனிக்க நேர்கிறது. அதன் காரணமாகவே இங்கு நான் பேச விழைகிறேன். இப்படிப்பட்ட சூழ்நிலை மிகுந்த வேதனை அளிப்பதாக உள்ளது. மாண்புமிகு நீதிபதி ஆலம் அவர்கள் ஊபாச் சட்டத்தின்கீழ் புனையப்பட்ட வழக்குகளின் புள்ளி விவரங்களுடன், மிகச்சிறப்பான ஒரு பகுப்பாய்வை செய்துள்ளார். என்னைப் போலன்றி சிறந்த பேச்சாளரான நீதிபதி திரு.கௌடா அவர்கள் பல்வேறு நீதிமன்றத் தீர்ப்புகளைச் சிறப்பாகப் பகுப்பாய்வு செய்து உள்ளார்.

நான் முதலில் அரச துரோகம் பற்றிப் பேச விரும்புகிறேன். ஒரு சனநாயக நாட்டில் அரசதுரோகம் எனும் கருத்தாக்கம் சனநாயகத்திற்கு ஒவ்வாதது. ஏனெனில் சனநாயகத்தில் அரசை எதிர்த்துக் கேள்வி கேட்கும் உரிமை ஒவ்வொரு குடிமகனுக்கும் உள்ளது உண்மையிலேயே பிரிட்டிஷ் ஆதிக்கத்தின் கீழ் இந்தியா இருந்தபோது அவர்களுடைய ஆதிக்கத்திற்கு எதிராக எவரும் கேள்வி கேட்கக்கூடாது என்பதற்காக உருவாக்கப்பட்ட சட்டமே “அரச துரோகம்” என்னும் குற்றம். எனவேதான் இந்தச் சட்டப்பிரிவின் வார்த்தைகள் ‘அரசுக்கு எதிரான வெறுப்போ அவமரியாதையோ அல்லது நிந்தனையோ எதை ஏற்படுத்தினாலும் அது அரச துரோகம்’ என்று வரையறுக்கிறது. ஆனால் இதுகுறித்து நான் மகாத்மா காந்தியின் வார்த்தைகளை விட மேலதிகமாக எதையும் கூறிவிடமுடியாது என்று கருதுகிறேன். ஒரு நபருக்கு ஓர் அமைப்பின் மீதோ அல்லது தனி நபர் மீது பற்று இல்லை என்றாலோ அல்லது கண்டிக்க வேண்டும் என்று கருதினாலோ அவர் தன்னுடைய கருத்தை முழுமையாக வெளிப்படுத்தவும், தனது பற்றற்ற நிலையைத் தெரிவிக்கவும் முழுமையான சுதந்திரம் இருக்க வேண்டும். அதாவது அந்த சுதந்திரம் வன்முறையைத் தூண்டுவதாகவோ அல்லது வன்முறை வளர்ப்பதாகவோ இல்லாமலிருந்தால் பற்றற்ற தனது கருத்தை அல்லது வெறுப்பை

வெளிப்படுத்த அவருக்கு முழு சுதந்திரமும் இருக்க வேண்டும். ஆனால் கெடுவாய்ப்பாக, சில ஆண்டுகள் முன்பு வரை கூட அரசுக்கு எதிராகக் கோபத்தையோ, வேறுபாடான கருத்தையோ ஏற்படுத்தும் விதமாக எதைக் கூறினாலும் அது அரச துரோகம் என்றே கருதப்பட்டது. ஆனால் இந்தியாவின் தலைமை நீதிபதியாக இருந்து பின்னர் தில்லி பல்கலைக்கழகத்தின் துணைவேந்தராகவும் பணியாற்றிய சர் மாரிஸ் காயர், எந்த ஒரு எதிர்க் கருத்தும் வன்முறையைத் தூண்டுவதாக அல்லாமல் இருந்தால், அது அரச துரோகம் இல்லை என்று கூறினார். ஆனால் கெடுவாயிப்பாக அவருடைய தீர்ப்பைப் பிரித்தானிய பிரிவின்கவுன்சில் மாற்றியமைத்தது. இறுதியாக 1962ல் உச்சநீதிமன்றத்தின் ஐந்து நீதிபதிகள் அடங்கிய அமர்வு கேதர்நாத் வழக்கில் அரச துரோகம் என்றால் என்ன என்பது குறித்து மிகத்தெளிவான வரையறையை அளித்தது. மாறாக, உங்களது செயல்பாடுகள் எடுத்துக்காட்டாக திஷா ரவியைப்போல விவசாயிகள் போராட்டத்தில் கலந்துக் கொள்வது போன்ற செயல்கள் “அரச துரோகமாகாது”.

இந்த அரச துரோகச் சட்டத்தை முறை தவறிப் பயன்படுத்துவதே ஒரு பிரச்சினையாக இருக்கிறது. ஏனெனில் சனநாயகத்தின் அடிப்படையான, அதிகாரத்தை எதிர்த்துக் கேள்வி கேட்பவர்களின் குரல்வளையை நெறிப்பதற்காக இச்சட்டத்தை பயன்படுத்துவதுதான் பிரச்சனை. நீங்கள் என்னுடன் ஒத்துப்போகாமல் இருக்கலாம் நான் உங்களுடன் ஒத்துப்போகாமல் இருக்கலாம். ஆனால் நாம் இருவரும் ஒத்துப்போகாமல் இருப்பதை அமைதியான முறையில் ஏற்றுக்கொள்ள வேண்டும். இரண்டுவிதமான பார்வைகள் இல்லாமல் எப்படி ஒரு சனநாயக பூர்வமான விவாதம் நடக்கும்? இன்றைக்குக் கூட நான் எனக்கு எதிரான கருத்துக்களை முன்வைக்கும் பேச்சாளர்களின் குரலைக் கேட்கவே விரும்புகிறேன். இருப்பினும் மீண்டும் மீண்டும் அரச துரோகச் சட்டம் தவறாகப் பயன்படுத்தப்படுவது மிகத் தெளிவாகப் புலனாகிறது. சமீபத்தில் கூட உச்ச நீதிமன்ற நீதிபதி திரு.லலித் அவர்கள் வினோத் வழக்கில் அரச துரோகம் என்பதைப் பற்றித் தெளிவுபடுத்தி இருக்கிறார். ஆனால் இதுபோன்று தெளிவுகளும் விளக்கங்களும் எத்தனை வந்தாலும், காவல்துறை இச்சட்டத்தை முறைகேடாக பயன்படுத்தியே வருகிறது என்று கருதுகிறேன். உச்சநீதிமன்றம், தகவல் தொடர்பு சட்டப் பிரிவு 66A என்பது அரசியல் சாசனத்தின் அடிப்படை உரிமையான பேச்சு சுதந்திரத்திற்கு எதிராக இருக்கிறது என்று ஸ்ரேயா சிங்கா வழக்கில் 66Aவை ரத்து செய்து ஆணை பிறப்பித்த பின்பும் இன்று வரை நூற்றுக்கணக்கான, ஆயிரக்கணக்கான வழக்குகள் இச்சட்டப்பிரிவின் கீழ்பதிவு செய்து வருகிறார்கள். என்னுடைய பார்வையில், வன்முறையைத் தூண்டுவது என்றால் வழக்கில் அரச துரோகம் என்று குதிரைக்கு கடிவாளம் கட்டியது போல குறுகிய பார்வையிலேயே பார்க்கிறார்கள். வன்முறையைத் தூண்டும் குற்றத்திற்கு எதிராக இன்று ஊபா போன்ற பல்வேறு சட்டங்கள் வந்துவிட்டன, எனவே என்னுடைய தனிப்பட்ட பார்வையில் நமது சட்டப்

புத்தகங்களில் அரச துரோகக் குற்றத்தை இன்னும் வைத்திருக்க வேண்டிய தேவையே இல்லை என்று கருதுகிறேன். இந்தச் சட்டத்தை உடனடியாக ரத்து செய்ய வேண்டும். ஆனால் உச்சநீதிமன்றம் வேறுவிதமாக கருதினால், அதைத் தொடர்ந்து நடைமுறையில் வைத்திருப்பதன் பொருட்டு சில பாதுகாப்புகளை ஏற்படுத்த வேண்டும். 1974இல் திருமதி இந்திரா காந்தி இதைக் கைது செய்யக்கூடிய ஒரு குற்றமாக மாற்றினார். எனவே 74-க்கு முன்பு இருந்ததைப் போல இக்குற்றம் கைது செய்யப்பட வேண்டிய ஒரு குற்றமல்ல என்ற நிலையைக் கொண்டு வரவேண்டும். ஏனெனில் தொடர்ந்து இச்சட்டம் மென்மேலும் கடுமையானதாக ஆகி வருகிறது. ஒரு அரச துரோக வழக்கில் ஒரு காவல் அதிகாரி ஒரு நபரைக் கைது செய்வதற்கு ஒரு வாரண்ட் கூட தேவைப்படுவதில்லை. எங்கோ ஹிமாச்சல பிரதேச மாநிலத்தில் உட்கார்ந்துகொண்டு தில்லியில் இருக்கும் ஒரு பத்திரிக்கையாளர் மேல் அரச துரோக வழக்குப் பதிவு செய்து குற்றச்சாட்டை வனைகிறார்கள். இச்சட்டம் ரத்துச் செய்யப்பட்டாலோ அல்லது அரசமைப்புச் சட்டத்திற்கு எதிரானது என்று தீர்ப்பளிக்கப்பட்டாலோ நான் கூடுதலாக மகிழ்ச்சியடைவேன். அதுவரை இச்சட்டத்தைப் பயன்படுத்துவதில் சில பாதுகாப்பு நிபந்தனைகள் இருப்பது அவசியம். தொடர்ந்து இச்சட்டம் மென்மேலும் கடுமையானதாகிக் கொண்டே வருகிறது. இது ஒரு எதிரொலி கேட்கும் களமாகத் தோன்றுகிறது. உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதி கருத்துத் தெரிவித்துள்ள இந்த நேரத்தில், இது போன்ற வழக்குகள் பிரிவு 124Aஇன் கீழ் புனையப்பட்டால் அவ்வழக்கு அரசமைப்புச் சட்டத்துக்கு விரோதமானது என்று அறிவிக்கக்கூடிய தருணம் வந்து விட்டது என்றே கருதுகிறேன்.

ஊபா வழக்குகள் பற்றி நான் பேச விழையும் போது, இது குறித்து விவாதிக்கும்போது, ஒரு முன் எச்சரிக்கையுடன் தொடங்க வேண்டும் என்று கருகிறேன். நான் பயங்கரவாத நடவடிக்கைகளுக்கு எதிராக ஒரு சட்டம் தேவையில்லை என்று கூறவரவில்லை. ஆனால் பயங்கரவாத நடவடிக்கைகள் என்பது குறித்துத் தெளிவான வரையறை நமக்குத் தேவை. மாறாக, ஊபாச் சட்டத்தில் காணப்படுவது போல குழப்பமான அல்லது வரையறைக்குட்படாத "பயங்கரவாத நடவடிக்கைகள்" என்று எதுவும் இருக்க முடியாது. இதனால் பலபேர் இச்சட்டத்தில் சிறைபடுத்தப்படும் போது, காவல் துறையினருக்கு இவை ஊபாச் சட்ட வரையறைக்குள் வராது என்பது தெரியும். ஆனால் அவர்கள் ஊபாச் சட்டத்தின் பல பிரிவுகளுக்குக் கீழான குற்றச்சாட்டுக்களைச் சேர்க்கும் போது நீதிமன்றங்கள் பிணையில் விடத் தயங்கும் என்பதும் அல்லது நீதிமன்றங்கள் பிணையில் விட முடியாது என்பதும் தெரியும். அண்மையில் முகமது இலியாஸ், இர்ப்பான் ஆகியோர் NIA நீதிமன்றத்தால் 12 ஆண்டுகளுக்குப் பிறகு விடுதலை செய்யப்பட்டதும், ஊபாச் சட்டத்தின் கீழ் சூரத்தில் குற்றம்

வளையப்பட்ட 122 பேர்களும் 20 ஆண்டுக் காலத்திற்குப் பிறகு விடுதலை செய்யப்பட்டதும் மிகுந்த வேதனையளிப்பதாக உள்ளது.

நடாஷா நாவால் பிணையில் விடுவிக்கப்பட்டார். ஆனால் அவர் சிறையில் இருந்த காலத்தில் அவருடைய தந்தை காலமாகிவிட்டார். அதே போல சித்திக் கப்பனின். தாயார் அவர் சிறைபட்டுள்ள காலத்தில் இறந்து விட்டார். 84 வயதான அருட்தந்தை ஸ்டேன் சுவாமிக்குப் பிணை கிடைக்கவில்லை.

நாமெல்லாம் மானுட பிறவிகள்தானா? நாம் இதுபோன்று வயதான, தளர்வுற்ற, நோயுற்ற மனுதனுக்குப் பிணையை மறுக்கும் அளவு மனிதத் தன்மையை இழந்து விட்டோமா?

பொதுவாகப் பிணையை மறுக்கக்கூடிய பிரிவு 43D மற்றும் 43E இருந்தபோதிலும் உச்சபட்ச நீதிமன்றத்தின் அதிகாரத்தைப் பயன்படுத்தி இது போன்றவர்களுக்குப் பிணை வழங்கப்பட்டிருக்க வேண்டும். மும்பை உயர் நீதிமன்றம் அவருக்கு சிறையில் தேவைபட்ட சிகிச்சையை அளிப்பதை உறுதிபடுத்தியது என்பதில் சந்தேகம் இல்லை. ஆனால் ஏன் விடுவிக்கவில்லை? அவர் ஓடி ஒளியவோ அல்லது இந்த நாட்டைவிட்டு வெளியேறிவிடவோ போவதில்லை. சட்டத்தில் பிணைக்கு பொருள்தான் என்ன? ஒரு நபர் பிணையில் விடுவிக்கப்பட்டால் அவர் சாட்சியங்களைத் தனக்குச் சாதகமாகத் தூண்டக்கூடாது என்பதும், சட்டத்தின் பிடியிலிருந்து தப்பி விடக்கூடாது என்பதும் தானே இதன் அடிப்படை? ஸ்டேன் மற்றும் பிறருக்குப் பிணை வழங்கும்போது நீதிமன்றத்திற்கு இதற்குத் தேவையான நிபந்தனைகளைப் போடப் போதுமான அதிகாரம் உள்ளது. ஆனால் ஊபாச் சட்டப்பிரிவு 44Dயும் வட்டாலி வழக்கின் தீர்ப்பும் இதற்குத் தடையாக உள்ளது. ஆனால், நஜீப் வழக்கில் இதுபோன்ற சட்டப்பிரிவுகள் மூலம் உச்ச நீதிமன்றத்தின் அதிகாரத்தை நீர்த்துப் போகச் செய்ய இயலாது என்று 3 நீதிபதிகள் அடங்கிய அமர்வு கூறிய கருத்தையும், பரந்த பார்வையுடன் இதை அணுகியதையும் நன்றியறிதலோடு பார்க்க வேண்டும். ஆனால் இது இன்னும் குழப்பமான நிலையில் நம்மை வைத்துள்ளதா அல்லது இந்த 3 நீதிபதிகள் அமர்வின் கருத்து, நீதிபதிக்கு நீதிபதி மாறுபடுமா என்பதை என்னால் தெளிவாகக் கூற இயலவில்லை. ஒரு சட்டப்பிரிவு பிணையில் விடக்கூடிய உச்ச நீதிமன்றத்தின் அதிகாரத்தைப் பறிப்பதாக இருக்குமானால் அல்லது நீதிமன்றத்தின் சீராய்வு அதிகாரத்தை மறுப்பதாக இருக்குமானால் அது அரசமைப்புச் சட்டத்திற்கே விரோதமானது என்பதே என் கருத்தாகும்.

நீங்கள் (NDPS) போதை மருந்துகள் சட்டத்தில் இருப்பது போல நிபந்தனைகளை விதிக்கலாம். ஆனால் இங்கு பிரிவு 173 கீழான காவல்துறை அறிக்கையில் இருக்கும் அனைத்தையும் நம்ப வேண்டும் என்ற நிலை இருக்கிறது. அவ்வாறு காவல் அதிகாரியின் 173

அறிக்கையை அப்படியே உண்மை என்று கருதினால் பிணை தருவது என்பதே சாத்தியமில்லை. காவலராக உள்ள எவரும் தங்களுடைய பிரிவு 173 அறிக்கையில், வழக்குக்கு முகாந்திரம் உள்ளது என்பதையே கூறுவார் என்பதை நாம் உணர வேண்டும். தில்லி உயர்நீதிமன்ற நீதிபதி பம்பானி அவர்களின் தீர்ப்பு இந்த விசயத்தைப் பொறுத்தமட்டில் குறிப்பிடத்தக்கது. அதில் ஊபாச் சட்டத்தின் கீழ் வழக்குப் போட எந்தச் சட்ட முகாந்திரமும் இல்லை. ஆகவே நீதிமன்றம் பிரிவு 43D படி பரிசீலிக்க எந்தத் தேவையும் இல்லை.

எந்த பயங்கரவாதச் சம்பவமும் நடைபெறவில்லை என்பதால் ஊபாவின் கீழ் வழக்கே வராது என்று தில்லி உயர்நீதிமன்றம் கூறியுள்ளது. அவர்கள் CAAவிற்கு எதிராகச் சாலை மறியலில் ஈடுபட்டார்கள் என்பதால் பயங்கரவாதச் சட்டத்திற்கு கீழ் வழக்கு தொடுப்பது என்ற கேள்விக்கே இடமில்லை என்றும் கூறியுள்ளது. எனவே ஊபா போன்றதொரு சட்டம் தற்போது இருக்கும் விதத்தில் சட்டப்புத்தகங்களில் இருக்கக் கூடாது என்பதே எனது கருத்தாகும். இந்த நாட்டில் பயங்கரவாதத்திற்கு எதிராக ஒரு சட்டம் தேவையா என்று கேட்டால் நான் கோஃபி அன்னன் அவர்களை மேற்கோள் காட்டலாம். அதைக்காட்டிலும் நான் லால் பகதூர் சாஸ்திரி அவர்கள் கூறியதை நினைவு கூற விழைகிறேன்.

அவர், நாகாலந்து, மணிப்பூர் பிரச்சினைகளைக் கையாளுவதற்குத் தனக்கு இதுபோன்ற சட்டங்கள் தேவையில்லை என்றும், தான் அவர்களிடம் நேருக்கு நேர் பேசி இப்பிரச்சினைகளைக் கையாள முடியும் என்றும் கூறினார். எனவே நாம் பயங்கரவாதம் இல்லை என்று கூறி நம் கண்களை மூடிக்கொள்ள இயலாது, உண்மையில் சர்வதேச அளவில் உள்ள பயங்கரவாதம் என்பது நம் அனைவருக்கும் கவலையளிப்பதாக உள்ளது. எனவே நான் பயங்கரவாதத்திற்கு எதிராக சட்டமே தேவையில்லை என்று கூறமாட்டேன். மாறாகச் சட்டம் மிகக் சரியாகப் புரிந்து கொள்ளப்பட வேண்டும் என்று கூறுகிறேன். இச்சட்டம் பயங்கரவாத நடவடிக்கைகளுக்கு எதிராக மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டும். இந்த சட்டம் முறைகேடாகப் பயன்படுத்தபடாமல் இருக்கும் விதத்தில் இச்சட்டம் உருவாக்கப்பட வேண்டும்.

இதுவரை, நீதிமன்றங்களில் இதுபோன்ற சட்டங்கள் அரசமைப்புச் சட்டத்தின் பாற்பட்டதா, இல்லையா என்ற விசயத்தை வரையறுக்கும் நேர்வுகளில், அச்சட்டம் முறைகேடாகப் பயன்படுத்தப்படுவதற்கும் வாய்ப்புள்ளதாக இருக்கும் என்று கருதினால் அச்சட்டத்தை ரத்து செய்ய இயலாது. மாறாக தவறாக பயன்படுத்துவதை சரி செய்யும் படியும், சட்டத்தை முறையாக அமல்படுத்தும் படியும் கூற வேண்டியுள்ளது. இதுபோன்ற சட்டங்கள் அன்றாடம் தவறாக பயன்படுத்தப்படுவதை நீதிமன்றத்தின் முன் நிரூபிக்கும்போது அதை

முறையாக நடைமுறைபடுத்தும் படி கூற வேண்டியுள்ளது. ஆனால் இப்படிபட்ட சட்டக் கருதுகோள்களை மறுபரிசீலனை செய்ய வேண்டியுள்ளது என்று நினைக்கிறேன்.

NSA என்ற அரச பாதுகாப்புச் சட்டத்தை எடுத்துக் கொள்வோம், ஒருவர் கோவிட் பெருந்தொற்றை மாட்டுச் சிறுநீர் மூலம் குணப்படுத்த முடியாது என்று சொன்னதற்காக NSAவில் கைது செய்யப்பட்டு, சிறையில் தள்ளப்பட்டிருக்கிறார். நாம் ஒரு எதேச்சதிகாரமான போலீஸ் ராஜ்ஜியத்தில் வாழ்கிறோமா? இவற்றையெல்லாம் கருத்தில் கொண்டு, நீதிமன்றங்கள் ஏற்கனவே அளித்த தீர்ப்புகளைக் கூட மீள் பரிசீலனை செய்யவேண்டும். இது போன்ற சட்டங்கள் அரசமைப்புக்கு உட்பட்டதா என்ற கேள்வி, நீதிமன்றத்தின் முன்னர் எழுப்பப்படும்போது உச்ச நீதிமன்றம் தனது அதிகாரத்தை உறுப்பு 142 மூலம் பயன்படுத்த வேண்டும். மேலும் விசாகா வழக்கில் அளித்த வழிகாட்டுதல் கட்டளைகளைப் போல, ஊபாச் சட்டத்தின் கீழ் வழக்கு தொடுப்பதற்கு முன்பு கடைபிடிக்க வேண்டிய வழிகாட்டுதல்களை உருவாக்கவேண்டும்.

இவ்வழக்குகளுக்கு ஒரு சீராய்வுக் குழு உள்ளது. நம் அனைவருக்குமே இந்தக் குழு என்ன செய்யும் என்பது தெரியும். இந்தக் குழு 2800 பக்கங்களை ஒரே இரவில் படித்து முடித்து அடுத்த நாளே வழக்குப் போடுவதற்கு ஒப்புதல் அளிக்கிறது. இந்நிலையில் சட்டத்திற்குப் புறம்பான முறையில் சிறைப்படுத்தப்பட்டது என்று பின்னர் தீர்மானிக்கப்பட்டால், அவர்களுக்கு இழப்பீடு வழங்கப்பட வேண்டும். ஏற்கனவே மேற்கூறியபடி மணிப்பூரைச் சேர்ந்த திருவாளர் கைது செய்யப்பட்டது போன்ற நேர்வுகளில் நீதித்துறை நடுவர் இழப்பீட்டைத் தீர்மானித்து அதை வழங்க உத்தரவிடவேண்டும். இப்படித் தரப்படும் இழப்பீட்டை, பொய் வழக்குப் போட்ட அதிகாரியின் சொந்தப் பணத்திலிருந்து தரும்படி உத்தரவிட வேண்டும். அப்போதுதான் இது போன்ற நேர்வுகளில் அவர்கள் தங்களுக்கு அரசியல் ரீதியாக வரும் அழுத்தங்களுக்கும் கட்டளைகளுக்கும் இணங்குவதற்கு இருமுறை யோசனை செய்வார்கள். நீதிமன்றங்களும், இது போன்று பாதிக்கப்பட்ட மக்களிடம் கடுமை காட்டாமல், சட்டத்தை நடைமுறைபடுத்தும் அதிகார அமைப்புகளிடம் கடுமையாக நடந்துக் கொள்ள வேண்டும். தற்போது நாட்டுப்பற்று என்ற பெயரில் குறுகிய தேசிய வாதக் கண்ணோட்டத்தின் அடிப்படையில் ஊபாச் சட்டத்தை முறைகேடாகப் பயன்படுத்துவதைப் பார்க்க முடிகிறது. ஆனால் நாட்டிற்கு எதிரான நடவடிக்கைகளுக்கு மட்டுமே இந்த ஊபாச் சட்டம் பயன்படுத்தப்பட வேண்டும். மாவட்ட நீதிமன்றங்கள் இதுபோன்ற சட்டங்களில் பிணையில் விடுவிக்கும்போது சமூக வலைதளங்களில் வரக்கூடிய எதிர்வினைகள் குறித்துக் கவலை கொள்கின்றன. எனவே உயர்நீதிமன்றங்களும், உச்சநீதிமன்றமும் முன்னோடிகளாக இருந்து வழி நடத்த வேண்டும் என்று கருகிறேன். இந்த நீதிமன்றங்களுக்கு இருவிதமான பணிகள்

இருப்பதாக நான் கருதுகிறேன். ஒன்று, நீதிமன்றங்களில் வழக்குகளில் உத்தரவுகளை பிறப்பிக்கும் பணி. மற்றொன்று குடிமக்களின் மனித உரிமைகளை காக்கும் பணி. உலகம் முழுவதிலும் அடிப்படை உரிமைகளுக்காக உறுப்பு 32இன் மூலம் நேரடியாக உச்சநீதிமன்றத்தை அணுகும் உரிமையை அடிப்படை உரிமையாக கொண்டிருக்கும் வெகு சில அரசமைப்புச் சட்டங்களுள் இந்திய அரசமைப்புச் சட்டமும் ஒன்றாகும். எனவே அடிப்படை உரிமைகளுக்கும், நீதிமன்றத்திற்கும் நமது அரசமைப்புச் சட்டத்தின் சிற்பிகள் கொடுத்த முக்கியத்துவத்தை மக்களின் உரிமைகளைப் பாதுகாக்கவும், உரிமைகள் பறிபோகும்போது உரிமைகளுக்குப் போராடுவதற்கு இந்த நீதிமன்றங்களுக்கு கடமையும், பொறுப்பும் உள்ளது என்பது புலனாகிறது.

இவை எல்லாவற்றையும் இணைத்து, ஒட்டுமொத்தமாக நாம் செய்ய வேண்டியது என்ன என்று பாரக்கும்போது எந்தெந்த சட்டங்கள் தெளிவான வரையறைகளை கொண்டிருக்கவில்லையோ, அவையெல்லாம் ரத்து செய்யப்பட வேண்டும் அல்லது நீதிமன்றங்களால் அச்சட்டத்தின் தெளிவற்ற தன்மைகள் நீக்கப்பட வேண்டும். அதாவது இன்னின்ன நடவடிக்கைகள் உட்பட்டவை என்றும் இன்னின்ன நடவடிக்கைகள் சட்டத்திற்குப் புறம்பானவை என்றும் நீதிமன்றங்கள் தெளிவுபடுத்த வேண்டும். இந்த ஊபா மற்றும் அரச விரோதச் சட்டம் ஆகியவற்றில் உள்ள தெளிவற்ற நிலைதான் இச்சட்டங்களைக் காவல் துறையினர், மக்கள் மீது ஏவி சிறையில் தள்ளப் பயன்படுகின்றது. இன்று வரை கூட சில நீதிபதிகள் எது அரச விரோதம் எது பயங்கரவாதம் என்பதையே புரிந்துக் கொண்டவர்களாக இல்லை. இதை நான் கடந்த 40 ஆண்டுகளாகச் சட்டத்துறையில் இருப்பதால் வேதனையோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

தற்போது தில்லி உயர்நீதிமன்றம் அளித்துள்ள மிகச் சிறப்பான தீர்ப்பு என்பது குறித்துப் பெருமகிழ்ச்சியடைகிறேன். இது ஊபா வழக்குகளில் பிணையில் விடும் அணுகு முறையைக் குறித்து மிகச் சிறப்பாக ஆராய்ந்து எழுதப்பட்ட தீர்ப்பு என்று கருதுகிறேன்.

****************

# மாண்புமிகு திரு. வி. கோபால கௌடா, உச்சநீதிமன்ற நீதிபதி (ஓய்வு) அவர்களின் உரை



தீவிரவாதத்திற்கு எதிரான நடவடிக்கைகளை எடுக்கக்கூடிய சூழலில், குடிமை உரிமைகள் மற்றும் சுதந்திரம் / தேசப் பாதுகாப்பு குறித்து ஐ.நா.வின் முன்னாள் பொதுச் செயலாளர் கோஃபி அண்ணன் ஒருமுறை,

“தீவிரவாதத்திற்கு எதிரான கடுமையான தடுப்பு நடவடிக்கைகளில், மனித உரிமைகள் பாதுகாப்பை பலி கொடுக்க முடியாது என்பதில் நாம் அனைவரும் தெளிவாக இருக்க வேண்டும். அதே வேளையில், தொலைநோக்குப் பார்வையில், சனநாயகம், சமூக நீதி ஆகியவற்றோடு மனித உரிமைகள் காப்பாற்றப்பட வேண்டும். இதுதான் தீவிரவாதத்திற்கு எதிரான சரியான நடவடிக்கையாக இருக்க முடியும்” என்ற முக்கியமான கருத்தை தெரிவித்திருந்தார்.

மக்களை மையப்படுத்திய தேசிய பாதுகாப்பே இன்றைய தேவையும், அவசியமுமாகும். தற்போது இந்தியாவில் தேசப் பாதுகாப்பிற்கான சிறப்பு சட்டங்களில் மிக அதிக அளவிலான சீர்திருத்தங்கள் தேவைப்படுகின்றன. ஏனெனில், “சர்வாதிகார சிந்தனைப் போக்கு”, அரசமைப்பின் அடிப்படையிலான சனநாயக கட்டமைப்பிற்கு மிகவும் ஆபத்தானதாக அமையும்.

இந்த சூழலில், சட்ட சீர்திருத்தங்கள் தவிர்க்க இயலாததாக இருக்கின்றன. தேசப் பாதுகாப்பிற்கான சிறப்பு சட்டங்கள் வழங்கும், வரம்பில்லா அதிகாரங்களின் அடிப்படையில் அத்துமீறல்களை நிகழ்த்தும் பொது ஊழியர்களுக்கு, தண்டனை விலக்கு வழங்கும் பிரிவுகள் கட்டாயம் நீக்கப்பட வேண்டும். அதிகார எல்லை வரம்புகளை, தெளிவாக வரையறுக்கும் கடுமையான விதிமுறைகள் உருவாக்கப்பட வேண்டும். இந்த சிறப்பு சட்டங்கள் குறித்து அண்மை காலங்களில் வெளிவரும் தீர்ப்புகளும், தீர்ப்புகளில் இடம்பெறும் விளக்கங்களும் சீரற்றதாகவும், குறிப்பிட்ட சில சூழல்களை மையப்படுத்தியுமே இருக்கின்றன. எனவே, மனித உரிமைகளுக்கும், தேசப்பாதுகாப்புக்கும் இடையிலான முரண்களை சரி செய்யும் நோக்கில், இவற்றில் பின்னிப் பிணைந்திருக்கும் கோட்பாடுகள் குறித்த தெளிவு உடனடியாக தேவைப்படுகிறது.

தேசிய விசாரணை அமைப்பு எதிர் ஸாகூர் அஹ்மத் ஷா வாட்டலி [(2019) 5 SCC 1] என்ற வழக்கில், உச்ச நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பு குறித்து விவாதிக்க வேண்டிய தேவை உள்ளது. சட்ட விரோத நடவடிக்கைகள் (தடுப்புச்) சட்டம், 1967 பிரிவு 43 D (5) பிணை வழங்குவதை தடுக்கிறது. காவல்துறையினரால் பராமரிக்கப்படும் வழக்கு குறிப்பேடுகளின் அடிப்படையில், குற்றம் சுமத்தப்பட்ட நபர் மீதான குற்றத்திற்கான காரணங்களை, முதல் நோக்கிலேயே உண்மை எனக்கறுதி, நீதிமன்றம் ஒருவருக்கு பிணை மறுக்கலாம். எனவே, பிணை மனு மீதான விசாரணையின் போது, அரசு தரப்பு வாதத்தினை பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளுதல் தொடர்பான நீதிமன்றங்களின் சுயமாக முடிவெடுக்கும் அதிகாரத்தினை சட்ட விரோத நடவடிக்கைகள் (தடுப்புச்) சட்டம் கட்டுப்படுத்துகிறது. இந்நேர்வுகளில் குற்றச்சாட்டினை மறுப்பதற்கான வாய்ப்பு ஒருவருக்கு இல்லாத காரணத்தால், அந்த குற்றமானது, உண்மை போல தோன்றலாம். மேற்சொன்ன வழக்கில், சட்ட விரோத நடவடிக்கைகள் (தடுப்புச்) சட்டத்தின் கீழ், பிணை வழங்குதல் குறித்து பரிசீலிக்கும் போது, அரசு தரப்பு வாதங்களை விரிவாக அலசுவதற்கோ, தனது முன்பாக உள்ள சாட்சியங்கள் போதுமானவையா என்று பார்ப்பதற்கோ கூட நீதிமன்றத்திற்கு அனுமதி இல்லை என்ற நிலைப்பாட்டினை உச்சநீதிமன்றம் எடுத்துள்ளது. இச்சட்டத்தின் கீழ், பிணை மனு மீதான பரிசீலனையின் போது, அரசு தரப்பு சாட்சியங்களை கவனத்தில் கொண்டு, அதனடிப்படையில் மட்டுமே முடிவெடுக்க வேண்டிய அளவுக்கு, நீதிமன்றங்களின் அதிகார வரம்பு மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. அரசு தரப்புக்கு எதிராக வலுவான விவாதங்களையோ, சாட்சியங்களையோ முன் வைக்க முடியாத அளவில், இந்த சட்டத்தின் கீழான வழக்கில் குற்றம் சுமத்தப்பட்டுள்ளவரின் கரங்கள், மேற்சொன்ன தேசிய விசாரணை அமைப்பு எதிர் ஸாகூர் அஹ்மத் ஷா வாட்டலி [(2019) 5 SCC 1] தீர்ப்பால் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. எனவே, வழக்கு விசாரணை முடியும் வரையில் பிணை என்பது முற்றிலும் சாத்தியமில்லாத ஒன்றாக உள்ளது. (பிணை கிடைப்பதற்கு நீண்ட காலமாகலாம்). இந்திய அரசியலமைப்பு சாசனம் உறுதிபடுத்தியிருக்கும், அடிப்படை உரிமைகளான வாழ்வுரிமை, தனி நபர் சுதந்திரங்கள் மற்றும் விரைவான வழக்கு விசாரணை போன்றவற்றின் அடிப்படைகளையே தகர்ப்பதாக, இந்த உச்சநீதிமன்ற தீர்ப்பின் விளக்கம் அமைகிறது.

நல்வாய்ப்பாக, மனித உரிமைகளையும், தேசப் பாதுகாப்பையும் ஒத்திசைந்து பார்க்க, சில தீர்ப்புகள் முயன்றிருக்கின்றன. சான்றாக ஒன்றிய அரசு எதிர் கெ.ஏ. நஜீப் என்ற வழக்கில் 01.02.2021 அன்று, நீதியரசர்கள் என்.வி. ரமணா, சூர்யா காந்த, அனிருத்த போஸ் ஆகிய மூன்று நீதிபதிகள் அடங்கிய ஆயம் கீழ்கண்ட தீர்ப்பினை வழங்கியுள்ளது. ,

“பிணை வழங்குவது தொடர்பான, சட்ட விரோத நடவடிக்கைகள் (தடுப்புச்) சட்டத்தின் பிரிவு 43 D (5) போன்ற சட்ட ரீதியான கட்டுப்பாடுகள், இந்திய அரசியலமைப்பு சாசனத்தின் அடிப்படை உரிமைகள் மீறப்படும் போது, பிணை வழங்குவதற்கான உச்ச/உயர் நீதிமன்றங்களின் அதிகார வரம்பினைக் கட்டுப்படுத்தாது. சொல்லப்போனால், ஒரு சட்டத்தில் இடம் பெற்றிருக்கும் கட்டுப்பாடுகளும், அரசியலமைப்பு சாசனத்தின் அதிகார வரம்புக்குள் இருக்கும் அதிகாரங்களும், ஒன்றோடோன்று ஒத்திசைந்து செல்ல வேண்டும். ஆனால், நீதிமன்ற விசாரணையின் துவக்கத்திலேயே பிணை வழங்குவதற்கு எதிரான சட்ட ரீதியான அம்சங்களை நீதிமன்றங்கள் கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டும் என்று எதிர்பார்க்கப்படும் அதே வேளையில், குறிப்பிட்ட கால வரம்பிற்குள் நீதிமன்ற விசாரணை முடிவதற்கான சாத்தியக் கூறுகள் இல்லாத நிலையிலும், ஏற்கனவே குற்றம் சுமத்தப்பட்டவர் அனுபவித்து இருக்கக்கூடிய சிறை தண்டனையின் அளவு, அக்குற்றத்திற்கான வரையறுக்கப்பட்டுள்ள தண்டனை காலத்தை விட கூடுதலாக இருக்கும் பட்சத்திலும், இது போன்ற சட்டப் பிரிவுகளின் கடுமை எதை நோக்கியதாக அமைகிறது? சட்ட விரோத நடவடிக்கைகள் (தடுப்புச்) சட்டத்தின் பிரிவு 43 D (5) போன்றவற்றை பயன்படுத்தி, பிணை மறுப்பதற்கோ அல்லது அடிப்படை உரிமையான விரைவு விசாரணையை மறுப்பதற்கோ பயன்படுத்தப்படும் சூழலுக்கு எதிரான பாதுகாப்பாக இவ்வாறான அணுகுமுறை அமையும்.

மேலே கண்ட வழக்கில், 2016ஆம் ஆண்டில், ஏஞ்சலா ஹரிஸ் சொன்டக்கே எதிர் மகராஷ்டிரா மாநில அரசு என்ற இதே வழக்கின் தன்மையையொத்த குற்றம் சுமத்தப்பட்ட நபருக்கு, உச்சநீதிமன்றம் பிணை வழங்கியதை மேற்கோள் காட்டியுள்ளது. அதுவும் சட்ட விரோத நடவடிக்கைகள் (தடுப்புச்) சட்ட பிரிவுகளின் கீழ் தாக்கல் செய்யப்பட்ட ஒரு வழக்காகும். அந்த வழக்கில், பிணை வழங்குதல் தொடர்பான, சட்ட விரோத நடவடிக்கைகள் (தடுப்புச்) சட்ட பிரிவு 43 D (5)ன் கடுமையையும் மீறி, மனுதாரர் ஏற்கனவே ஐந்து ஆண்டுகள் சிறையில் அடைக்கப்பட்டிருந்த சூழல் மற்றும் அந்த வழக்கில் 200 சாட்சிகள் விசாரிக்கப்படவிருக்கும் நிலையில், குற்றச்சாட்டின் தன்மையையும், நீதிமன்ற விசாரணை இனியும் எடுத்துக் கொள்ளவிருக்கும் கால அளவையும் கணக்கில் கொண்டு, உச்சநீதிமன்றம் பிணை வழங்கியது. அதேபோல 2017ஆம் ஆண்டில், சாகர் தத்யராம் கோர்கே எதிர் மகராஷ்டிரா மாநில அரசு வழக்கில், சட்ட விரோத நடவடிக்கைகள் (தடுப்புச்) சட்ட பிரிவுகளின் கீழ் குற்றம் சுமத்தப்பட்டவர் நான்கு ஆண்டுகள் சிறையில் அடைக்கப்பட்டிருந்த நிலையில், அந்த வழக்கில் 147 சாட்சிகள் விசாரிக்கப்படவேண்டிய சூழலில், பிணை வழங்கப்பட்டது.

சட்ட விரோத நடவடிக்கைகள் (தடுப்புச்) சட்டம் போன்ற சிறப்பு சட்டங்களில் இடம்பெறும் பிணை வழங்குவதை மிகவும் கடுமையாக்கும் பிரிவுகள், விதிவிலக்கான

வழக்குகளுக்கு மட்டுமே பொருந்துவதாக இருக்கவேண்டும். ஆகவே, இத்தகைய சிறப்பு சட்டங்களின் நோக்கம் ஒரு வரம்புக்குள் இருக்க வேண்டும். இது போன்ற கடுமையான பிரிவுகள், பொதுவான குற்றவியல் சட்டங்களுக்கு மாற்றாக இருக்க முடியாது. இத்தகைய சிறப்பு சட்டங்கள் விதிவிலக்கான மற்றும் பொதுவான சூழல்களை இல்லாமல் ஆக்குகிறது. ஏனெனில், இவைகள் தெளிவற்ற, மிகவும் பரந்த விளக்கங்களைக் கொண்டதால், வகை தொகையின்றி அவற்றை பயன்படுத்துவதற்கு அரசு எந்திரங்களை அனுமதிக்கிறது. இவை குற்றம் சுமத்தப்பட்ட நபர்களை ஆண்டுக்கணக்கில் விசாரணையின்றி சிறைக்குள் தள்ளுகின்றன. கெடு வாய்ப்பாக இவை அரசுக்கு எதிராக, மாற்றுக் கருத்து கொண்டோருக்கு எதிரான ஆயுதமாக பயன்படுத்தவும், பல சனநாயக சக்திகளை சிறையில் அடைக்கவும் பயன்படுத்தப்படுகின்றன.

குற்ற மனம் இல்லாத நபர்கள், குற்றவியல் சட்டங்களில் தேவையில்லாமல் சிக்க வைக்கக்கூடாது என்பதை உறுதிசெய்யும் நோக்கில், இத்தகைய பிரிவுகள் கறாராகவும், வரையரையோடும் பயன்படுத்தப்பட வேண்டும். இது போன்ற சட்ட பிரிவுகளின் கடுமை, மேற்சொன்ன கடுமையான வரையறைக்கு இசைவாக இருக்க வேண்டும்.

சட்ட விரோத நடவடிக்கைகள் (தடுப்புச்) சட்டத்தின் கறாரான வரம்புக்கு உட்பட்டு, குடிமை உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும் என்ற நோக்கில், உச்சநீதிமன்றத்தாலும், பல்வேறு உயர்நீதிமன்றங்களாலும் ஏற்கனவே வழங்கப் பட்டுள்ள தீர்ப்புகளின் அடிப்படையில், ஒரு சட்டவியல் கோட்பாடு உருவாக்கப்பட வேண்டும். அதனடிப்படையில் சில கொள்கைகள் தெளிவுபடுத்தப்பட வேண்டும்.

1. குற்றவியல் சட்டங்கள் எப்பொழுதுமே தெளிவான வரையறைகள் கொண்டதாகவும், குறிப்பிட்ட விபரங்களை உள்ளடக்கியதாகவும் இருக்க வேண்டும்.
2. தேசப் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படுத்தக்கூடிய குறிப்பிட்ட விதிவிலக்கான சூழல்களை எதிர்கொள்வதற்காக வடிவமைக்கபட்ட சட்ட விரோத நடவடிக்கைகள் (தடுப்புச்) சட்டம் போன்ற சிறப்பு தேசப்பாதுகாப்பு சட்டங்களின் செயற்படுதளம், குறிப்பிட்ட வழக்குகளுக்கு மட்டுமே பொருந்துவதாக இருக்க வேண்டும். இவற்றை பொதுவான குற்றவியல் சட்டங்களை பயன்படுத்த வேண்டிய இடத்தில் பயன்படுத்தக் கூடாது.
3. சட்ட விரோத நடவடிக்கைகள் (தடுப்புச்) சட்டத்தில் பயன்படுத்தப் பட்டிருக்கும் “தீவிரவாதம்” என்ற சொற்பிரயோகம், இந்தியாவின் தேசப் பாதுகாப்பு, இறையாண்மை மற்றும் ஒருமைப்பாடு போன்றவற்றோடு தொடர்புடைய பொருளில் மட்டுமே பார்க்கப்பட வேண்டும். இவை பொது ஒழுங்கு குற்றங்களில் இருந்து பிரித்து பார்க்கப்பட வேண்டும். பொது ஒழுங்கு பிரச்சனைகளை தேசத்துரோக குற்றங்களோடு


இணைத்து பார்க்கக் கூடாது. சட்ட விரோத நடவடிக்கைகள் (தடுப்புச்) சட்டத்தின் கீழ் தீவிரவாத வழக்கை முதல் நோக்கிலேயே நிறுவ வேண்டிய சூழல் இருப்பதால், குற்றச்சாட்டு மிகவும் குறிப்பிட்டதாகவும், தெளிவானதாகவும் மற்றும் சான்றுகளுடனும் இருக்க வேண்டும். தேவையான அடிப்படை சான்றுகளை உருவாக்குவதில் யூகங்களுக்கான வாய்ப்பு இருக்கக்கூடாது என்பதை விளக்க வேண்டியதில்லை. சட்ட விரோத நடவடிக்கைகள் (தடுப்புச்) சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்படும் வழக்கில், முதல் நோக்கிலேயே அதன் தன்மையை உறுதி செய்யும்போது, யூகங்களோ, அனுமானங்களோ அடிப்படையாக அமைய முடியாது. யூகங்கள் இல்லாத தெளிவான அடிப்படைகளைக் கொண்ட வழக்குகளில், பொதுவான குற்றவியல் சட்டப்படியான பிணை நடவடிக்கைகளே பொருந்தும்.

சட்ட விரோத நடவடிக்கைகள் (தடுப்புச்) சட்டம், தேசப் பாதுகாப்பு சட்டம் போன்ற சிறப்பு பாதுகாப்பு சட்டங்களில் உள்ள மற்றொரு முக்கியமான பிரச்சனை, அரசு எந்திரங்களுக்கு பல நேரங்களில் தண்டனை விலக்கு வழங்கும் வகையில் பொறுப்புணர்வு இல்லாத ஒரு நிலையை உருவாக்குகிறது. இத்தகைய நேர்வுகளில் குடிமை உரிமைகள் மற்றும் சுதந்திரங்களை மறுப்பதாகவும், அவற்றிலிருந்து முற்றிலும் விலகுவதுமான சூழலை உருவாக்குகிறது. தனது கடமையிலிருந்து தவறி, குற்றமிழைத்த பொது ஊழியரைத் தண்டிப்பதற்கு, பொதுவான குற்றவியல் சட்டங்களில், முன் அனுமதி பெற்று, குற்ற வழக்கு தொடர வாய்ப்புள்ளது. ஆனால் சட்ட விரோத நடவடிக்கைகள் (தடுப்புச்) சட்டம் போன்ற சிறப்பு பாதுகாப்பு சட்டங்களில், பொது ஊழியர்களுக்கு பொத்தாம் பொதுவான பாதுகாப்பு வழங்கப்பட்டு, குற்றம் புரிந்த அதிகாரிகள் மீது சட்டப்படியான நடவடிக்கையினை தொடர, வழி வகை ஏதும் இல்லை. (சட்ட விரோத நடவடிக்கைகள் (தடுப்புச்) சட்டம், பிரிவு 49)

இவ்வாறு எந்த கடப்பாடும் இல்லாத பொது ஊழியர்களுக்கு வழங்கப்பட்டுள்ள கட்டற்ற அதிகாரம், அரசமைப்பு சனநாயகத்திற்குப் பேராபத்தாக அமையும். ஏனெனில், தண்டனையிலிருந்து விலக்களிப்பதன் மூலம், சட்டப்பூர்வமாக அத்துமீறல்களை நிகழ்த்திட, பொது ஊழியர்களுக்கு அவை களம் அமைத்துக் கொடுப்பதாக அமையும்.

அதிகபட்ச அதிகாரம், கூடுதல் பொறுப்புணர்வோடு இணைந்தது. இந்திய இறையாண்மையையும், ஒருமைப்பாட்டையும் காப்பது எவ்வித சந்தேகமுமின்றி, இந்திய அரசுக்கு மிகப்பெரும் பொறுப்பாகும். தீவிரவாதம் கடுமையாக எதிர் கொள்ளப்பட வேண்டும். ஆனால் அதே வேளையில் குடிமை உரிமைகளையும், தேசப்பாதுகாப்பையும் இணைந்து கொண்டு செல்வதற்கான பொறுப்பு, அரசிடம் உள்ளது. அது எந்த சூழலிலும் அரசமைப்பு சனநாயகத்திற்கு, உட்பட்டதாகவே அமைய வேண்டும்.

# மாண்புமிகு திரு. மதன் பி. லோக்கூர், உச்சநீதிமன்ற நீதிபதி (ஓய்வு) அவர்களின் உரை



நீண்ட காலம் சிறையிலிருந்த பிறகு விடுதலை செய்யப்பட்டவர்களுக்கு இழப்பீடு வழங்குவதற்கு ஒர் அமைப்புத் தேவையா என்பதுதான் நான் உரையாற்றுவதற்கு முன் எனக்கு வைக்கப்பட்டுள்ள கேள்வியாகும். இந்தக் கேள்விக்கு ஒரே சொல்லில் பதில் கொடுக்க வேண்டுமென்றால், ஆம், அப்படிப்பட்டதோர் அமைப்புக் கட்டாயம் தேவை என்பதுதான். ஆனால் இந்தத் தலைப்பைக் கடந்து, மேலும் செல்வதற்கு நான் விரும்புகிறேன். விடுதலை செய்யப்பட்டதோடு சிறையில் இருந்ததற்கு இழப்பீடு பெறுவது எனும் கேள்வி மட்டுமல்ல, நமது குற்றவியல் நீதி முறையில் எண்ணற்ற பிற நிகழ்வுகளுக்கும் கட்டாயம் இழப்பீடு தரப்பட வேண்டும்.

கொடுங்கோன்மைச் சட்டங்களான அரச விரோதச் சட்டம் மற்றும் சட்டவிரோத நடவடிக்கைகள் தடுப்புச் சட்டம் ஊபா (UAPA) ஆகியவை நீக்கப்பட வேண்டுமென அனைத்துச் சொற்பொழிவாளர்களும் சுட்டிக்காட்டினார்கள். இத்தகைய சட்டங்கள் எங்கும் போகப்போவதில்லை, மாறாமல் நமது சட்டப் புத்தகத்திலேயே அவை தொடர்ந்து இருக்கும் என்பதுதான் எனது கண்ணோட்டமாக இருக்கிறது. இதற்கு மாறாக தேசியப் பாதுகாப்புச் சட்டம் NSA இந்தப் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளது. எனவே மணிப்பூரில் NSA பயன்பாட்டில் உள்ளது. உத்தரப்பிரதேசத்தில் சூளுஹ சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட 90க்கும் அதிகமான தடுப்புக்காவல் ஆணைகளை அலகாபாத் உயர்நீதிமன்றம் தள்ளுபடி செய்துவிட்டது. ஆகவே அரச விரோதச் சட்டம் மற்றும் ஊபாச் சட்டங்கள் மட்டுமல்ல, மாற்றுக் கருத்தை அடக்கி ஒடுக்கவும், அரசின் கருத்திற்கு இணங்காத மக்களைத் தடுக்கவும் சூளுஹ சட்டத்தை அதிக அளவில் பயன்படுத்தப் போவதை நாம் இனிமேல் பார்க்கப் போகிறோம்.

இழப்பீடு குறித்த வரலாற்றிற்குள் சிறிதளவு போக விரும்புகிறேன். நமது நீதி பரிபாலனத்தில் மனித உரிமைகளுக்காக இழப்பீடு வழங்குவது குறித்து இன்றைய காலகட்டத்தில் தீவிரமாக விவாதிக்கப்பட்டு வந்தாலும், அது ஒன்றும் புதிதல்ல. இதுகுறித்து உச்ச நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட ஐந்து வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தீர்ப்புகளைச் சுருக்கமாகக் குறிப்பிட நான் விரும்புகிறேன்.

முதலாவதாக, 1983ஆம் ஆண்டு நடைபெற்ற ரூடுல் ஷா வழக்கு. 1978ஆம் ஆண்டு விசாரணைக்குப் பிறகு அவர் விடுவிக்கப்பட்டார். ஆனால் கெடுவாய்ப்பாக விடுதலை செய்யப்பட்ட பிறகும், அவர் சிறையில் அடைக்கப்பட்டு 14 ஆண்டுகளுக்கு பிறகுதான் 1982ஆம் ஆண்டுதான் வெளியே அனுப்பப்பட்டார். எனவே அவருக்கு இழப்பீடாக ரூ.30,000 உச்சநீதிமன்றம் வழங்கியது. அந்தக் காலகட்டத்தில் அது ஒரு கணிசமான தொகையாக இருந்தது. மேலும் கூடுதல் இழப்பீடு பெற, சிவில் வழக்குத் தொடரும் உரிமையையும் உச்ச நீதிமன்றம் வழங்கியது.

செபாஸ்டியன் ஹான்கிரே என்பவரும் வேறு சிலரும் இராணுவத்தால் பிடிக்கப்பட்டு, பிறகு அவர்கள் காணாமல் போய் விட்டார்கள். அவர்களை நேர் நிறுத்துமாறு உச்சநீதிமன்றம் கோரியது. ஆனால், அப்படிப்பட்ட நிகழ்வு நடைபெறவே இல்லை என மறுக்கப்பட்டுவிட்டது. இருப்பினும் அவர்கள் இராணுவத்தின் பிடியில்தான் உள்ளனர் என்று ஆதாரங்கள் சுட்டிக்காட்டின. ஆனால் அவர்கள் நேர் நிறுத்தப்படாததால், அவர்கள் இறந்து போய் விட்டதாகவோ அல்லது காணாமல் போய் விட்டதாகவோ கருதப்பட்டு, பாதிக்கப்பட்ட குடும்பத்தினருக்கு ஒரு இலட்சம் ரூபாய் உச்சநீதிமன்றம் இழப்பீடாக வழங்கியது.

1985ஆண்டில் ஜம்மு-காஷ்மீர் சட்டப்பேரவையின் உறுப்பினராக இருந்தவர் பேராசிரியர் பீம்சிங்.

அவர் சட்டப்பேரவைக் கூட்டத்தில் பங்கேற்பதற்காகப் பயணம் செய்து கொண்டிருந்தார். ஆனால் வழியிலேயே அவர் கடத்தப்பட்டதால், பேரவை நிகழ்வில் பங்கேற்க அனுமதிக்கப்படவில்லை. பேராசிரியராகவும் வழக்கறிஞராகவும் இருந்ததால், அவர் ஒரு வழக்கைத் தொடுத்தார். இப்படி ஒருவரைக் கடத்திக் கொண்டு போவது எவ்வாறு சாத்தியமாகிறது என்பதை அறிய உச்சநீதிமன்றம் விரும்பியது. அவருக்கு ரூ.50,000 இழப்பீடாக வழங்கப்பட்டது.

1989ஆம் ஆண்டு சஹேலி எனும் தன்னார்வ அமைப்பு, போலீஸ் காவலில் நிகழ்ந்த ஒரு மரணத்திற்கு எதிராக வழக்கு தொடுத்தது. உச்சநீதிமன்றம் இவ்வழக்கில் 75,000 ரூபாய் இழப்பீடாக வழங்கியது.

1993ஆம் ஆண்டில் நிலாபட்டி பெஹேராவின் மகன் போலீஸ் காவலில் மரணமடைந்தது குறித்து உச்சநீதிமன்றம் ஒரு தீர்ப்பை வழங்கியது. ஓர் இரயில் தண்டவாளத்தின் அருகே அவரது உடல் பின்னாளில் கண்டெடுக்கப் பட்டது. இவ்வழக்கில் அந்தப் பெண்ணுக்கு 1,50,000ரூபாய் இழப்பீடாக உச்ச நீதிமன்றம் வழங்கியது.

எனவே இழப்பீடாகப் பணம் தருவது என்பது புதிதானது அல்ல. ஒருவர் காணாமல் போகும் பொழுதும், கடத்தப்படும் பொழுதும், போலீஸ் காவலில் இறக்கும் பொழுதும் உச்சநீதிமன்றத்தால் இழப்பீடு வழங்கப்படுகிறது. 1993ஆம் ஆண்டு நிலாபட்டி பெஹேரா வழக்கிற்குப் பிறகு, இத்தகைய சட்டவிரோதமான கைது நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை. மேலும் மனித உரிமைகள் மீறப்படும் பொழுது, இழப்பீடு வழங்குவது நீதி பரிபாலனத்தில் அனேகமாக இல்லாமலேயே போய்விட்டது. இதற்கான காரணம் எது என்பது எனக்குத் தெரியவில்லை. மீண்டும் ஒரு முறை இத்தகைய சிக்கலை நாம் எதிர்கொள்கிறோம். திறமைமிக்க விஞ்ஞானியாகிய நம்பி நாராயணன் வழக்கு இப்பொழுது வந்துள்ளது. சட்டவிரோதமாக அவர் அடைத்து வைக்கப்பட்டார். எனவே உச்சநீதிமன்றம் அவருக்கு 50 இலட்சம் ரூபாய் இழப்பீடாக வழங்க ஆணை இட்டது. இது சில ஆண்டுகளுக்கு முன்பு நடைபெற்றதாகும்.

அண்மையில் அகில் கோகாய் கைது செய்யப்பட்டு, ஊபாச் சட்டத்தின்கீழ் ஓராண்டிற்கு மேல் சிறையில் அடைக்கப்பட்டார். குற்றச்சாட்டுப் பதிவு செய்வதற்காக அவரது வழக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட பொழுது, விசாரணை நீதிபதி ஊபாச் சட்டத்தின் கீழ் எந்த ஒரு குற்றமும் செய்யப்படவில்லை என அவரை விடுதலை செய்தார். வழக்கிலிருந்து விடுவிக்கப்படுதற்கு மட்டுமல்ல, வழக்கிலிருந்து குற்றமற்றவர் என முழுமையாக விடுதலை செய்யப்படுவருக்கும் இது ஓர் எடுத்துக்காட்டாகும்.

எனினும் அவருக்கு இழப்பீடு ஏதும் வழங்கப் படவில்லை. ஊபாச் சட்டத்தின் கீழும், அரசு விரோதச் சட்டத்தின் கீழும் வழக்குப் பதிவு செய்வதற்கு வழிகாட்டு நெறிமுறைகளை உருவாக்க வேண்டியதின் தேவை குறித்து அப்பொழுது வலியுறுத்தப்பட்டது. ஆனால் எதுவும் நடக்கவில்லை.

மிக அண்மையில் முனவாா் பரூக்கி உச்ச நீதிமன்றத்தால் விடுதலை செய்யப்பட்டார். ஏன்ீ காவல்துறை அவரைக் கைது செய்த பொழுது, 2014ஆம் ஆண்டு அர்னேஷ்குமார் வழக்கில் உச்சநீதிமன்றம் உருவாக்கிய வழிகாட்டு நெறிமுறைகள் பின்பற்றப்படவில்லை என்பதுதான் அதற்குக் காரணம். உரிய வழிகாட்டு நெறிமுறைகளை உச்சநீதிமன்றம் வகுத்திருந்தாலும், அவற்றைப் பின்பற்ற வேண்டியதில்லை எனக் காவல்துறை தீர்மானித்தால், அவை பின்பற்றப்பட மாட்டாது. முனவாா் பரூக்கி சட்டவிரோதமாகக் கைது செய்யப்பட்டிருந்தாலும், இழப்பீடு எதுவும் அவருக்கு வழங்கப்படவில்லை.

திரிபுராவைச் சேர்ந்த முகமது ஹபீப், ஊபாச் சட்டக் குற்றச்சாட்டுகளின் அடிப்படையில் பெங்களூருவில் கைது செய்யப்பட்டார். அவர் நான்கு ஆண்டுகள் சிறையில் இருந்தார்.

அதன்பின் அவருக்கு எதிராக உரிய ஆதாரங்கள் இல்லாத காரணத்தால், அவர் விடுவிக்கப்பட்டார். அவர் விடுவிக்கப்பட்டார் எனினும், குற்றமற்றவர் என விடுதலை செய்யப்படவில்லை எனும் வழக்கிற்கு இதுவும் கூட ஓர் எடுத்துக்காட்டாகும். இருப்பினும் அவருக்கு எந்த ஓர் இழப்பீடும் வழங்கப்படவில்லை.

பல நபர்களை விடுதலை செய்யுமாறு நீதிமன்றங்கள் அறிவுறுத்தினாலும், அவர்கள் விடுதலை செய்யப்படுவது இல்லை. 25ஆண்டுகளுக்கு முன்பு திகார் சிறையில் உள்ள சில நபர்களை விடுதலை செய்யுமாறு தில்லி உயர்நீதிமன்றம் வழிகாட்டி இருந்தது. ஆனால் உயர்நீதிமன்றத்தின் ஆணையை மீறக்கூடிய வகையில், 15 நாள்கள் அவர்களைத் திகார் சிறை விடுதலை செய்யவில்லை. சட்டவிரோதமாக அடைத்து வைத்திருந்ததற்காக அவர்களுக்கு உரிய இழப்பீடு கட்டாயம் வழங்கப்பட வேண்டும் என்று பிறகு வலியுறுத்தப்பட்டது.

உச்சநீதிமன்றத்தால் சஞ்சய் தத்துக்குப் பிணை வழங்கப்பட்டது. ஆனால் புனேவில் உள்ள எரவாடா சிறையில் மேலும் இரண்டு நாள்கள் அவர் அடைத்து வைக்கப்பட்டிருந்தார். ஏன்? ஏனென்றால், உச்சநீதிமன்றத்தின் ஆணை உரிய நேரத்தில் பூனாவிற்கு வந்து சேரவில்லை.

புதுதில்லி நீதிமன்றத்தால் மூன்று செயல்பாட்டாளர்களுக்கு அண்மையில் பிணை வழங்கப்பட்டது. காவல்துறையும் குற்றம் சாட்டுபவர்களும் என்ன கூறினார்கள்?

அவர்கள் கைது செய்யப்பட்ட பொழுது, அவர்களது ஆதார் அட்டையையோ அல்லது அவர்களுடைய முகவரியையோ காவலர்கள் எப்படிச் சோதனை செய்யாமல் விட்டார்கள்? இங்கே என்ன நடைபெற்றுக் கொண்டிருக்கிறது?

இரண்டு வாரங்களுக்கு முன்பு குழந்தைகள் எனத் தங்களை உரிமை கொண்டாடுபவர்கள், சிறையில் 14 மற்றும் 22 ஆண்டுகள் சிறையில் இருந்திருக்கின்றனர். உச்சநீதிமன்றம் அவர்களை விடுதலை செய்ய ஆணையிட்டது. ஆனால் உச்சநீதிமன்றம் உரிய பரிகார நடவடிக்கைகளை எடுக்கும் என அறிவிக்கும் வரை, ஆக்ரா சிறை அவர்களை விடுவிக்கவில்லை. அதன்பிறகுதான் அதை ஏற்றுக் கொண்டு, ஆக்ரா சிறை அவர்களை விடுவித்தது.

இவை அனைத்தின் விளைவுதான் என்ன? இதன் விளைவு என்னவென்றால், மணிப்பூர் செயல்பாட்டாளர் வழக்கில் அவரை விடுதலை செய்யுமாறு உச்சநீதிமன்றம் இறுதி நேரத்தில் மாலை ஐந்து மணிக்கு வலியுறுத்த நேரிட்டது. இத்தகைய இடத்திற்குத்தான் நாம் வந்து சேர்ந்து இருக்கின்றோம் என்பதை நீங்கள் கற்பனை செய்து பார்க்க முடியுமா?

நீதிமன்றம் ஒரு நபரை விடுதலை செய்யுமாறு கூறினால், சிறை நிர்வாகமும், காவலர்களும் அவர்களை உடனே விடுதலை செய்ய வேண்டும் என்பது அவர்களது கடமையாகும். இல்லை இல்லை, நான் எப்பொழுது நினைக்கிறேனோ, அப்பொழுது அவரை நான் விடுதலை செய்வேன் என்று அவர்கள் கூற முடியாது.

சட்டவிரோதமாக அடைத்து வைத்ததற்காக ஒரு நாளைக்கு 1000 ரூபாய் வீதம் 15 நாள்களுக்குத் திகார் சிறையில் இருந்தவருக்குத் தரப்பட்டது தவிர, வேறு எந்த வழக்குகளிலும் இழப்பீடு ஏதும் தரப்படவில்லை.

போலி மோதல் கொலை என்பது கவலைக்குரிய மற்றொரு பகுதியாகும்.போலி மோதல் கொலைகளுக்கு இழப்பீடு ஏதும் தரப்படுவது இல்லை. மணிப்பூரில் 12 வயதுச் சிறுவன் ஒருவன் தீவிரவாதி எனவும், தப்பியோட அவன் முயற்சித்தான் என்ற அடிப்படையிலும் அவனைப் பின்புறத்தில் சுட்டதாக வந்த ஒரு வழக்கினை நானும் நீதிபதி தீபக் குப்தா அவர்களும் கையாள நேரிட்டது. திறமையானதோர் நீதிபதியாகிய சந்தோஷ் ஹெக்டே அந்த சமயத்தில் ஓய்வு பெற்றிருந்தார். இந்த வழக்கினைக் கவனிக்குமாறு முன்னதாக அவர் கேட்டுக் கொள்ளப்பட்டு இருந்தார். இது ஒரு போலி மோதல் கொலை எனவும், அந்தச் சிறுவனுக்கு எதிராகக் குற்றம் சாட்டப்பட்டதைப் போல எந்த ஒரு நிகழ்ச்சியும் நடைபெறவில்லை எனவும் அவர் அறிக்கை சமர்ப்பித்தார். நாங்கள் குறுக்கீடு செய்யும் வரை அதில் எவ்வித இழப்பீடும் வழங்கப் படவில்லை.

உத்தரப்பிரதேசத்தில் தொடர்ந்து 119 பேர் போலி மோதல் கொலைகளில் கொல்லப்பட்டனர். 119 பேர் படுகொலை! அவர்கள் அனைவரும் தப்பியோட முயன்றனர் எனவும், அவர்கள் அனைவரும் காவலர்களிடம் இருந்து துப்பாக்கிகளைப் பறிக்க முயன்றனர் எனவும், அவர்கள் அனைவரும் பயங்கரமான கிரிமினல் குற்றவாளிகள் எனவும் குற்றம் சாட்டப்பட்டது. இது எவ்வாறு சாத்தியமானது? ஏதாவது ஒருவிசாரணை நடத்தப்பட்டதா? அல்லது காவலர்கள் அவர்களைச் சுட்டுக் கொல்லாம் எனவும், அவர்கள் அனைவரும் அஞ்சத்தக்க கிரிமினல் குற்றவாளிகள் எனவும் கூறுவார்களா?

இதைப்போலவே அசாமிலும் ஒரு சிறைக்கைதி தப்பித்து ஓட முயற்சித்தால், அவர்கள் சுட்டுக் கொல்லப் படுகிறார்கள். போலி மோதல் கொலையில் ஏற்கனவே ஐந்து நபர்கள் சுட்டுக் கொல்லப்பட்டு உள்ளனர். அவர்களுக்கான இழப்பீடு என்ன?

குற்றமற்றவர் என விடுதலை செய்யப்படும் வழக்குகளில் மட்டுமல்ல, வேறு பல வகையான வழக்குகளிலும் இழப்பீடு கட்டாயம் கொடுக்கப்பட வேண்டும்.

சூரத்தில் 19 ஆண்டுகளுக்குப் பிறகு 122 நபர்கள் குற்றமற்றவர்கள் என விடுதலை செய்யப்பட்டதாக அறிக்கைகள் உள்ளன. அவர்கள் அனைவரும் அவ்வளவு நாள்கள் சிறையில் இருக்கவில்லை. அவர்களில் சிலர் மட்டும் சிறிது காலம் சிறையில் இருந்து இருக்கின்றனர். பல ஆண்டுகளுக்குப் பிறகு விடுதலை செய்யப்பட்டதற்கு இந்த வழக்கு ஒரு எடுத்துக்காட்டு. ஆனால் யாருக்கும் எவ்வித இழப்பீடும் வழங்கப்படவில்லை.

பஷீர் அகமது பாபா என்பவர் காஷ்மீரில் வாழ்ந்து வருபவர். புற்றுநோய் எதிர்ப்பு முகாமில் பங்கேற்பதற்காக அவர் குஜராத்துக்குப் பயணம் செய்து கொண்டிருந்தார். அவர் ஒரு தீவிரவாதி என்ற அடிப்படையில் கைது செய்யப்பட்டு, 11 ஆண்டுகள் சிறையில் அடைக்கப்பட்டார். இந்த முரண்பாட்டைப் பாருங்கள்! அவர் என்ன செய்யப்போகிறார்? காஷ்மீரில் உள்ள மக்களுக்கு உதவுவதற்காகவும், புற்று நோயைக் குணப்படுத்துவது எவ்வாறு என்பதைப் புரிந்து கொள்வதற்காகவும், புற்றுநோயை எவ்வாறு கையாளவேண்டும் என்பதை அறிவதற்காகவும், புற்றுநோய் எதிர்ப்பு முகாமில் பங்கேற்க அவர் போய்க் கொண்டு இருந்தார். ஆனால் அவர்கள் அவரைச் சிறையில் அடைத்தார்கள். பின்னர் அவர் விடுதலை செய்யப்பட்டார். ஆனால் எவ்வகையான இழப்பீடும் அவருக்கு வழங்கப்படவில்லை.

ஆக்ரா சிறையில் 12 ஆண்டுகளிலிருந்து 22 ஆண்டுகள் வரை சிறையில் அடைக்கப்பட்ட சில நபர்களைப் பற்றி முன்பே நான் குறிப்பிட்டேன். பல்வேறு காரணங்களால் பல ஆண்டுகள் சிறைப் படுத்தப்பட்ட பிறகு, அவர்கள் விடுதலை செய்யப்படுவது எனும் கேள்வி மாத்திரம் இங்கு இல்லை. குற்ற நீதிக்கான முழு நிகழ் முறையும் இங்கு கவனிக்கப்பட வேண்டும். முகமது பரூக்கி வழக்கில் கைது செய்யப்பட்டதில் இருந்து தொடங்கி, அகில் கோகாய் வழக்கில் குற்றச்சாட்டுகள் பதிவிடப்பட்டது வரையிலும், விசாரணை மற்றும் விடுதலை வரையிலும் அனைத்தும் பரிசீலிக்கப்பட வேண்டும். இது மிகவும் முக்கியமானது. ஊபாச் சட்டம் மற்றும் அரசு விரோதச் சட்டம் விலக்கிக் கொள்ளப்பட வேண்டும் என்று கோருவது சரியானதுதான். ஆனால் அவை எங்கும் போகப் போவதில்லை என்று நான் நினைக்கின்றேன். மேலும் தேசப்பாதுகாப்புச் சட்டம் NSA மிகவும் அடிக்கடி இனிமேல் பயன்படுத்தப்படப் போகிறது.

எனவே இத்தகைய சூழலை மக்கள் எப்படி எதிர்கொள்ளப் போகிறார்கள்? பொறுப்பேற்கும் தன்மைதான் இதற்கான ஒரே பதில். பொறுப்பேற்கும் தன்மை என்பது இரண்டு வடிவங்களில் இருக்க வேண்டும். ஒன்று பொருளாதார ரீதியானது. இதன்படி போதுமான இழப்பீட்டுத் தொகை வழங்கப்பட வேண்டும். நம்பி நாராயணனுக்கு 50 இலட்சம் ரூபாய் கொடுக்கப்படும் என்றால், தவறாகக் கைது செய்யப்பட்ட, தவறாகச் சிறையில்

அடைக்கப்பட்ட அனைவருக்கும் ஒரு நல்ல தொகையை இழப்பீடாக உறுதியாக வழங்க முடியும். ஏன் முடியாது? காவல்துறையினர் அல்லது குற்றம் சாட்டுபவரிடம் நீங்கள் ஐந்து இலட்சம் ரூபாய் அல்லது 10 இலட்சம் ரூபாய் கொடுக்க வேண்டும் என்று நீதிமன்றங்கள் சொல்லத் தொடங்கினால், அவர்கள் வழிக்கு வருவார்கள் என்றும், தேவையற்ற கைது நடவடிக்கைகளை மேற்கொள்ள மாட்டார்கள் என்றும் நான் கருதுகின்றேன். இது ஓர் அம்சமாகும்.

தான் நிரபராதி என நம்பக்கூடிய நபருக்கு மட்டுமல்ல, இறுதியில் நிரபராதி என மெய்ப்பிக்கப்பட்ட நபருக்கும் ஏற்படும் மன அதிர்ச்சியை நாம் புறக்கணிக்கிறோம். அந்த நபர் அவர் செய்யாத செயலுக்காக அல்லது பொய்யான குற்றச்சாட்டுக்காகப் பற்பல ஆண்டுகள் சிறையில் இருப்பது குறித்துக் கடும் மன அதிர்ச்சிக்கு உள்ளாகிறார். அதைப் போலவே, மணிப்பூரைச் சார்ந்த செயல்பாட்டாளர் ஒருவரும் கோமூத்திரம் குறித்துச் சிலவற்றைச் சொன்னதற்காக அவர் மீது பயனற்ற குற்றச்சாட்டைச் சுமத்தித் தேசியப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் சிறையில் அடைக்கப்பட்டதற்காக அவரும் அதிர்ச்சிக்கு உள்ளாகிறார். அந்த நபருடைய மனநிலை எவ்வாறு இருக்கும்? அவர் மீதான உளவியல் தாக்குதல் எப்படி இருக்கும்? அவரது குடும்பம், அவரது குழந்தைகள் ஆகியோர் மீதான உளவியல் மற்றும் உணர்வுபூர்வமான தாக்கம் எப்படி இருக்கும்? அந்தக் குழந்தைகள் பள்ளிக்குச் செல்கின்ற போது, அவரைப் பார்த்து மற்ற குழந்தைகள் "உங்கள் தகப்பனார் சிறையில் இருக்கின்றார்" எனக் கூறுவார்கள். ஏன்? ஏனென்றால் அவர் ஒரு பயங்கரவாதி. ஏன்? ஏனென்றால் அவர் தேசவிரோதச் செயலைச் செய்தவர். ஏன்? ஏனென்றால் அவர் இந்த நாட்டின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக இருப்பவர். அவர் என்ன செய்தார்? அவர் எதுவும் செய்யவில்லை. புற்றுநோய் ஒழிப்பு குறித்த முகாமில் கலந்து கொள்ளச் சென்றவர், 11 ஆண்டுகளாகச் சிறையில் இருக்கிறார். ஒரு குழந்தை 11 அல்லது 12 ஆண்டுகள் பள்ளிக்குச் செல்லும். ஆனால் நாம் இது பற்றி எல்லாம் கவனிப்பதில்லை.

மன அதிர்ச்சி மிக மிக முக்கியமானது. ஏனென்றால் மனச்சோர்வுடைய மக்கள் இருக்கின்றனர். அவர்களது குடும்பங்கள் மனச்சோர்வு அடைகின்றன, அவருடைய நண்பர்கள் மனச்சோர்வு அடைகின்றனர், அவர்களுடைய உறவினர்கள் அனைவரும் மனச்சோர்வு அடைகின்றனர். இங்கு அப்பாவியான ஒரு மனிதர், தவறாகச் சிறையில் அடைக்கப்பட்டுள்ளார். எதற்காக? அவர் செய்யாத ஒன்றுக்காக? இத்தகைய போக்கின் மூலம் எப்படிப்பட்ட சமூகத்தை வளர்த்தெடுக்க நாம் முயற்சிக்கிறோம்?

இப்பொழுது "மென்மையான சித்ரவதை" (Soft torture) என்பது உருவாகி வருகிறது. மூன்றாவது வகை (Third degree) சித்திரவதையை நாம் அறிவோம். அதேபோல் இரண்டாம் வகைச் சித்திரவதையையும் நாம் அறிவோம். இப்பொழுது மென்மையான சித்ரவதை வந்துள்ளது. சிறையில் அதிக எண்ணிக்கையலான நபர்களைத் திணிப்பது இதற்கு ஒரு எடுத்துக்காட்டாகும். ஒரு நபர் இருக்கக்கூடிய சிறை அறையில், நான்கு பேர் இருக்கின்றனர். சிறை அறையிலுள்ள மேடையில் யார் உறங்குவார்கள்? வலிமையான சிறையாளி அதைத் தீர்மானிப்பாரா? எனவே தூங்கும் பொழுது இத்தகைய அசௌகரியங்கள் இருக்கின்றன.

இதற்கும் கூடுதலாக, சுகாதாரச் சிக்கல் இருக்கிறது. குழந்தைகளுக்கான கூர்நோக்குப் பாதுகாப்பு இல்லங்களை நான் பார்வையிட்டு இருக்கிறேன். 50பேர் தங்கக்கூடிய பொது அரங்கில் 50 பேர் மட்டும்தான் தங்க வேண்டும். ஆனால் அதற்கு அதிகமானோர் இருக்கின்றார்கள். மேலும் ஒரே ஒரு கழிப்பறைதான் பயன்பாட்டில் உள்ளது. எவ்வகையான சுகாதாரத்தை இதன் மூலம் நீங்கள் எதிர்பார்க்க முடியும்? சிறைகள் இதைக்காட்டிலும் ஓரளவு பரவாயில்லை. இது ஒரு வகையான சித்திரவதை அல்லவா?

சத்துமிக்க உணவு என்பது அக்கறை காட்ட வேண்டிய மற்றொரு விஷயம். எவ்வளவு கலோரி உணவு உட்கொள்ள வேண்டும், எவற்றை உண்ணக்கூடாது, எப்பொழுது உண்ண வேண்டும் என்பதைப்பற்றி எல்லாம் உணவியல் நிபுணர்கள் நமக்கு அறிவுறுத்துகிறார்கள். இவை அனைத்தும் சிறையாளிகளுக்கு வழங்கப்படுகிறதா? குழந்தைச் சிறையாளிகள் நிலை என்ன? ஜம்மு காஷ்மீர் மாநிலத்தில் பொதுப் பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் குழந்தைகள் சிறைப்படுத்த பட்டுள்ளார்கள்.அவர்களுக்கு கொடுக்கப்படும் சத்துணவு என்ன? அவர்கள் அடைத்து வைக்கப்பட்டு இருக்கும் இடத்தின் சுகாதாரநிலை பற்றி நமக்குத் தெரியுமா? மருத்துவ வசதி என்பது அக்கறை செலுத்த வேண்டிய மற்றொரு பகுதியாகும். மருத்துவ வசதிகள் என்பது ஒரு மனிதருக்கு உரிமையானவை அல்லவா? சிறையாளியாக இருந்தாலும் கூட? சிறையாளியாக இருந்தால்தான் என்ன?

பீமா கொரேகான் வழக்கில் சிறைப் படுத்தப்பட்டுள்ள ஹானி பாபு அவர்களது கண் மிகவும் மோசமான நிலையில் இருந்துள்ளது. அவரது பார்வையே பறிபோய்விடும் என்ற நிலை வந்த பிறகுதான், ஒரு மருத்துவமனைக்கு அவர் அனுப்பப்பட்டார் -- அதற்கு முன்னால் அல்ல! ஸ்டேன் சாமி அவர்களைப் பற்றி ஒவ்வொருவரும் பேசுகின்றனர். முன்னதாகவே அவருக்கு மருத்துவ சிகிச்சை ஏன் அளிக்கப்படவில்லை? மருத்துவ சிகிச்சை அளிக்க மறுப்பது, மென்மையான சித்திரவதை அல்லவா? மென்மையான சித்திரவதை என்பது ஒரு நபரை

அடிப்பது அல்ல. அதைப் போன்றது அல்ல மென்மையான சித்திரவதை என்பது. அடிப்படை வசதிகளை மறுப்பது கூட ஒரு வகையான மென்மையான சித்திரவதை ஆகும்.


ஒரு நாளில் இரண்டு மணிநேரம் மட்டும் தனது சிறை அறையிலிருந்து வெளியே செல்வதற்கு அனுமதிக்கப்பட்ட ஒரு நபரைப் பற்றி அண்மையில் ஓர் அறிக்கை வந்தது. அதாவது 22 மணி நேரம் அவர் சிறைக் கொட்டடியில் பூட்டி வைக்கப்பட்டுள்ளார். அனேகமாக அது தனிமைச் சிறைதான் அல்லது தனிமைச் சிறைக்கு இணையானது தான். இது மென்மையான சித்திரவதை அல்லவா?


நமது கிரிமினல் நீதி முறை பற்றிய முழுமையான விவரத் தொகுப்பைப் பார்க்க வேண்டும். நீண்டகாலச் சிறைக்குப் பிறகு விடுதலையாவது குறித்த பிரச்சனையை நான் கவனிக்க வேண்டுமென்று அஞ்சலி மற்றும் பிரசாந்த் ஆகியோர் குறிப்பிட்டது போல, ஓர் அம்சத்தை மாத்திரம் நாம் பார்க்க முடியாது. பிரச்சனையின் விரிவான தளத்தை நான் பார்க்க வேண்டும்.


நாம் எங்கே போய்க் கொண்டிருக்கிறோம்? அதுதான் நம்முன் உள்ள கேள்வி. இதற்குப் பரிகாரம் தான் என்ன? இழப்பீடு என்பது ஒன்று. பொறுப்பேற்கும் தன்மை என்பது மற்றொன்று.

மனநலம் என்பது இணையான முக்கியத்துவம் உடையது அல்லது மிகவும் முக்கியத்துவம் உடையது. ஏனென்றால் மோசமான அநீதி, பாதிக்கப்பட்டவருடைய வாழ்நாள் முழுவதும் துன்புறுத்தக் கூடியதாக இருக்கும். அவர்களுடைய வாழ்க்கை முடியும் வரை மட்டுமல்ல, அவருடைய குடும்பத்திலுள்ள அனைவரின் வாழ்க்கை முழுவதும், அவர்களுடைய குழந்தைகளுடைய வாழ்க்கை முழுவதும் பாதிக்கக்கூடியது. இதை வாழ்நாள் முழுவதும் அவர்கள் நினைவு வைத்திருப்பார்கள். விழித்தெழ வேண்டிய தருணம் வந்துவிட்டது.


15.08.2021 அன்று இணையவழி நடைபெற்ற சனநாயகத்தைப் பாதுகாப்போம் மாநில பரப்புரைக்கான தொடக்கக் கருத்தரங்கில் மக்கள் சிவில் உரிமைக் கழகத்தின் தேசிய பொதுச் செயலாளர் Dr. V. சுரேஷ் அவர்கள் ஆற்றிய உரையின்போது மேற்கோள்காட்டப்பட்ட புள்ளி விவரங்களின் சுருக்கம்










# RepealUAPA Campaign
UAPA Cases
2 of 8
220
147
73
4
56
13
4
99
22
150
89
211
13
43
24
161
16
1
1
1
45
72
46
25
1
S3 S10 S11 S12 S13 S15 S16 S17 S18 S18A S18B S19 S20 S21 S22 S22A S22C S23 S38 S39 S40 S46
UAPA Sections booked in 319 NIA-Cases (Data as of 10 August 2021)
UNLAWFUL ACTIVITIES : OFFENCES AND PENALTIES
PUNISHMENT FOR TERRORIST ACTIVITIES
S15 Terrorist act

S13 Punishment for unlawful activities
S40 8%
S39 15%
S38 23%
S23 14%
S21 5%
S20 51%
S19 8%
S18B 14%
S18A 4%
S10 18%
S11 4%
S13 31%
S15 7%
S16 47%
S17 28%
S18 67%
Percentage of times a UAPA Section is invoked in NIA Case
S20 Punishment for being member of terrorist gang or organisation
S21 Punishment for holding proceeds of terrorism.
S22 Punishment for threatening witness
S22A Offences by companies
S22C Punishment for offences by companies, societies or trusts
S23 Enhanced penalties
UNLAWFUL ACTIVITIES : OFFENCES AND PENALTIES
S3 Declaration of an association as unlawful
S10 Penalty for being member of an unlawful association, etc
S11 Penalty for dealing with funds of an unlawful association
S12 Penalty for contravention of an order made in respect of a notified place
S13 Punishment for unlawful activities




Of the 211 **Section 18** Cases where some incidents really happened




Suo Moto **UAPA** Cases by NIA
(Data as of 10 August 2021)

**Summary of NCRB Statistics of UAPA Cases between 2015-2019:**

Table 2.5:

| Year | Cases Registered | Persons Arrested |
|---|---|---|
| 2015 | 897 | 1128 |
| 2016 | 922 | 999 |
| 2017 | 901 | 1554 |
| 2018 | 1182 | 1421 |
| 2019 | 1226 | 1948 |
| **TOTAL=** | **5128** | **7050** |

Source: Lok Sabha Parliamentary Question No. 2486 dated 09.03.2021

| Conviction Rate: Calculated Based on the Number of Cases | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| Year | UAPA | | | IPC (Cognizable Crimes) | | |
| | Cases Where Trial Is Completed (A) | Cases Convicted (B) | Conviction Rate [(B/A)*100] | Cases Where Trial Is Completed (C) | Cases Convicted (D) | Conviction Rate [(D/C)*100] |
| 2015 | 76 | 11 | 14.5 | 1325989 | 621320 | 46.9 |
| 2016 | 33 | 11 | 33.3 | 1274348 | 596078 | 46.8 |
| 2017 | 69 | 34 | 49.3 | 1331222 | 649852 | 48.8 |
| 2018 | 125 | 34 | 27.2 | 1277011 | 638955 | 50 |
| 2019 | 113 | 33 | 29.2 | 1232507 | 620809 | 50.4 |
| Total | 416 | 123 | 29.56 | 6441077 | 3127014 | 48.54 |
| Conviction Rate from 2015-2019 | 29.56 | | | 48.54 | | |
| Source: NCRB - Crime in India: 2015-2019 - Chapter 19A, Tables 19A.7, 19A.5 | | | | | | |

Table 2.2:

| Conviction Rate: Calculated Based on the Persons Arrested | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| Year | UAPA | | | IPC (Cognizable Crimes) | | |
| | Persons Arrested (A) | Persons Convicted (B) | Conviction Rate [(B/A)*100] | Persons Arrested (C) | Persons Convicted (D) | Conviction Rate [(D/C)*100] |
| 2015 | 1128 | 23 | 2.03 | 3636596 | 869013 | 23.89 |
| 2016 | 999 | 24 | 2.4 | 3737870 | 794616 | 21.25 |
| 2017 | 1554 | 39 | 2.5 | 3727909 | 873983 | 23.44 |
| 2018 | 1421 | 35 | 2.46 | 3315033 | 864686 | 26.08 |
| 2019 | 1948 | 34 | 1.74 | 3112639 | 837075 | 26.89 |
| Total | 7050 | 155 | 2.19 | 17530047 | 4239373 | 24.18 |
| Conviction Rate from 2015-2019 | 2.19 | | | 24.18 | | |
| Source: NCRB - Crime in India: 2015-2019 - Chapter 19A, Tables 19A.7, 19A.5 & Lok Sabha Parliamentary Question No. 2486 dated 09.03.2021 | | | | | | |

Table 2.3:

| Charge-sheeting Rate | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| Year | UAPA | | | IPC (Cognizable Crimes) | | |
| | Cases Disposed By Police (A) | Cases Charge-sheeted (B) | Charge-sheeting Rate [(B/A)*100] | Cases Disposed By Police (C) | Cases Charge-sheeted (D) | Charge-sheeting Rate [(D/C)*100] |
| 2015 | 404 | 121 | 30.4 | 2869395 | 2056716 | 77.7 |
| 2016 | 414 | 232 | 56 | 2874811 | 2094996 | 72.9 |
| 2017 | 533 | 272 | 51 | 3039422 | 2147511 | 70.7 |
| 2018 | 1201 | 317 | 26.4 | 3142538 | 2138710 | 68.1 |
| 2019 | 1141 | 485 | 42.5 | 3160323 | 2123924 | 67.2 |
| Total | 3693 | 1427 | 38.64 | 15086489 | 10561857 | 70.00 |
| Charge-sheeting Rate from 2015-2019 | 38.64 | | | 70 | | |
| Source: NCRB - Crime in India: 2015-2019, Chapter 17A, Tables 17A.3, 17A.1 | | | | | | |

## Mismatch Between NCRB Statistics and Ground Data Collected:

Table 2.4:

| Year | UAPA Cases Registered in TN as per NCRB (PQ No.2486, 09.03.2021) | UAPA Cases Registered in TN as per Ground Data from Study |
|---|---|---|
| 2015 | 1 | 6 |
| 2016 | 0 | 5 |
| 2017 | 5 | NA |
| 2018 | 2 | NA |
| 2019 | 270 | NA |

**தேசிய அளவிலான சனநாயகத்தைப் பாதுகாப்போம்**

**பிரச்சாரத்தின் ஒரு பகுதியாக**

**தமிழ்நாட்டில் மாநில அளவிலான பரப்புரை நிகழ்வின் புகைப்படத் தொகுப்பு**

## 27.08.2021 செங்கல்பட்டு










## 25.08.2021 புதுச்சேரி










## 25.08.2021 மதுரை











## 23.08.2021 தூத்துக்குடி













## 22.08.2021 ராணிப்பேட்டை









## 25.08.2021 ஈரோடு



# சனநாயகம் கோரும் கருத்தரங்கு

**ஆகஸ்டு 25 / 2021 புதன் • மாலை 6 மணி • பெரியார் மன்றம், ஈரோடு.**

ஒன்றிய பாரதீய சனதாக்கட்சி அரசே!

- அரசத்துரோகச் சட்டத்தைத் திரும்பப்பெறு!
- சட்ட விரோதச் செயல்பாடுகள் தடுப்புச் சட்டம் (UAPA) மற்றும் பிற கொடுங்கோன்மைச் சட்டங்கள், தடுப்புக்காவலை அனுமதிக்கும் சட்டங்களை நீக்கு!
- பிணைக்கான உரிமையைப் பழைய நிலையில் செயற்படுத்து!
- அனைத்து அரசியல் கைதிகளையும் விடுதலை செய்!
- சட்ட விரோத வழக்குகளைத் தாக்கல் செய்ததற்குப் பொறுப்பேற்று, பாதிப்புற்றோருக்கு இழப்பீடு வழங்கு!
- சட்டவிரோதத் தடுப்புக்காவலை நிறுத்து!
- குற்றவியல் நீதி அமைப்பைப் படைக்கலமாகப் பயன்படுத்துவதை நிறுத்து!

தலைமை : **கண. குறிஞ்சி**
(பெரியாரிய உணர்வாளர்கள் கூட்டமைப்பு)

முன்னிலை :
**அனைத்துச் சனநாயக இயக்கங்களின் செயல்பாட்டாளர்கள்**

கருத்துரை

**ப.பா. மோகன்** (மூத்த வழக்கறிஞர்)

**பழனி பாரூக்** (தலைமைக்கழகப் பேச்சாளர், தமிழ்நாடு முசுலீம் முன்னேற்றக் கழகம்)

**ஏ.எஸ்.ஷபீக் அகமது** (மாநிலச் செயற்குழு உறுப்பினர், எஸ்டிபிஐ கட்சி)

**த.சண்முகம்** (திராவிடர் கழகம்)

**நிலவன்** (நீரோடை)

**கி.வே. பொன்னையன்** (தற்சார்பு விவசாயிகள் சங்கம்)

**தமிழ்ச்செல்வன்** (தமிழர் கழகம் கட்சி)

**வழ. செயப்பிரகாசம்** (புரட்சிகர இளைஞர் முன்னணி)

நன்றியுரை :
**ப. இரத்தினசாமி**
(திராவிடர் விடுதலைக் கழகம்)

ஒருங்கிணைப்பு :
**பெரியாரிய உணர்வாளர்கள் கூட்டமைப்பு & காவல் சித்திரவதைக்கு எதிரான கூட்டியக்கம்**
(தமிழ்நாடு / புதுச்சேரி)

தொடர்புக்கு : 94433 07681, 98427 1244, 94455 70664.

## 25.08.2021 திருப்பூர்



அரசத்துரோகச் சட்டத்தைத் திரும்ப பெறு...
சட்ட விரோத செயல்பாடுகள் தடுப்புச் சட்டம் (UAPA) மற்றும் கொடுங்கோன்மைச் சட்டங்கள் தடுப்பு காவலை அனுமதிக்கும் சட்டங்களை நீக்க..

ஒன்றிய அரசை வலியுறுத்தி

# ஆர்ப்பாட்டம்

25.08.2021, புதன் கிழமை மாலை 5.00 மணி, திருப்பூர் மாநகராட்சி அலுவலகம் முன்பு

தலைமை : **சண்.முத்துக்குமார்**
மாவட்ட தலைவர், பெரியார் திராவிடர் கழகம்

உரை நிகழ்த்துவோர் :

தோழர். **முகில்ராசு**
மாவட்ட செயலாளர்,
திராவிடர் விடுதலை கழகம்

தோழர். **நந்தகோபால்**
மாவட்ட செயலாளர்,
தீண்டாமை ஒழிப்பு முன்னணி

தோழர். **தமிழ்வேந்தன்**
மாவட்ட செயலாளர்,
விடுதலை சிறுத்தைகள் கட்சி

தோழர். **எம். ஹாரிஷ் பாபு**
மாவட்ட பொதுச் செயலாளர், SDPI

தோழர். **எம்.ஜெ.அபுசாலிஹ்**
மாவட்ட செயலாளர்,
மனிதநேய மக்கள் கட்சி

தோழர். **சபாபதி**
மாவட்ட செயலாளர்,
தமிழ் புலிகள் கட்சி

தோழர். **தமிழ் அமுதன்**
புரட்சிகர இளைஞர் முன்னணி

தோழர். **கார்த்திகேயன்**
மக்கள் அதிகாரம்

தோழர். **அர.விடுதலைச் செல்வன்**
துணை பொதுச் செயலாளர்,
ஆதித்தமிழர் பேரவை

**க.மணி**
வடக்கு மாவட்ட செயலாளர்,
ஆதித்தமிழர் பேரவை

நன்றியுரை : **செ.சின்னச்சாமி**
மாவட்ட செயலாளர், ஆதித்தமிழர் பேரவை

**காவல் சித்ரவதைகக்கு எதிரான கூட்டியக்கம், திருப்பூர்**

## 26.08.2021 கோயம்புத்தூர்



## 26.08.2021 வேலூர்




## 27.08.2021 வேலூர்



## 27.08.2021 திருநெல்வேலி

